521

# கண்ணன்

15-10-'58
13 ந.பை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1958



# கண்ணன் கடிதங்கள்

புங்கனூர் உயர்நிலைத் துவக்கப் பள்ளியில் பாரதியார் நினைவு நாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அம்பிகா வட்டப் பள்ளிகளின் நிர்வாகி திரு ஏ. எம். இரத்தினசாமி அவர்கள் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் எஸ். பி. அமலன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். பாரதியார் வரலாறுபற்றி அழகாகவும் வேடிக்கையாகவும் திருச்சி வானொலி நிலைய மணிமலர் அண்ணு எம். விசுவநாதன் அவர்கள் எழுத்துரைத்தார். ஆசிரியர் திரு டி. ராமராவ் அவர்கள் 'பாரதியும் குழந்தைகளும்' என்ற பொருள்பற்றிப் பேசினர். பேச்சுப் போட்டியில் மாணவன் என். பெரியசாமிக்கும் மாணவி என். சுஸ்கர் பேகத்துக்கும் முதற்பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர் தலைவன் சி. இராமையா நன்றி கூறினன். —உ. நி. து. பள்ளி, புங்கனூர்.

இந்த 1-10-58 இதழ் மிகவும் நன்ருக இருந்தது. 'சோலை வாழ்க!' பலே ஜோர்! கண்ணனை வாரம் ஒரு முறையாக மாற்றுங்கள்.
—ஆர். முருகேசன், சென்னை-14.

கண்ணன் இதழுக்கு இதழ் பொலிவுற்று வருவதைக் காண என் மனம் பூரிப்படைகிறது. குழந்தைகளுக்காகவே வெளிவரும் ஒரே பத்திரிகை கண்ணன் என்ருல் மிகையாகாது.
—பி. வி. கிரி, கலைஞன்; சென்னை-3.

காந்திஜயந்தி இதழாகக் கண்ணன் மலர்ந்துள்ளது. ஆனல் காந்தியடிகள் பற்றி ஒரு வரிகூட இல்லையே! அண்ணன் கடிதம் சிறுவர்களுக்கு அமுதமான பகுதி. காளிகோட்டை ரகசியத்தில் விறுவிறுப்பு மிகுதி. தெள்ளிய நீர்ச்சுனை வழிவதுபோன்ற ஆற்றெழுக்கு நடை. குழந்தை இலக்கியங்களுள் முதலிடம் பெறும். காலம் சொல்லும் கதையைக் கூறும் கோவியின் பேனவுக்கு வாழ்த்துக்கள். நீங்களும் நானும் பகுதியில் விடைகள் போற்றும் வகையில் அமைந்துள்ளன.
—பா. அமிழ்தன், பம்பாய்-28.

உருப் பெருக்கும் கருவி ஒரே குழப்பாக இருக்கிறது.
—ஆர். சாந்தா, கோவை-1.

அட்டைப்படம் கவர்ச்சியாக விளங்குகிறது. அரிவாட்டாய நாயனர் வெரிகுட்! கறுப்புக் கண்ணடி விறுவிறுப்பான கட்டத்தில் உள்ளது. —ஜே. மக்புல், தாம்பரம் கிழக்கு.

ஓர் இதழ் தவருமல் நண்பர் கணபதியின் பெயர் எப்படியும் அடிபடுகிறது அவருடைய ஆவலுக்கிணங்க நீங்களே ஏன் ஒரு கவிதைத் தொகுப்புக் கொண்டுவர முயலக்கூடாது? கண்ணன் வாசகர்கள் அனைவரும் வாங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.
—தி. கோவிந்தராசன், பீளமேடு.

கண்ணன் 'தபால்'கள் என்று போடாதீர்கள். 'கடிதங்கள்' என்று போடுங்கள். கண்ணன் கடிதங்கள் என்பதே ஏற்றதாக இருக்கும்.
—அ. கலியபெருமாள், அண்ணுமலை நகர்.

'சூரியன் வருவது யாராலே?' என்ற கதையைப் படித்த பிறகு இந்த ஸ்புட்னிக் யுகத்திலும் இப்படிப்பட்ட கதைகள் வெளிவருகின்றனவே என்று வருத்தச் சிரிப்புத்தான் வருகிறது. தொடர்கதை துப்பறிவதாக இருக்க வேண்டும் என்பது அவசியம்தானு?
—எஸ். தம்பிராஜா, பொல்காவலை (இலங்கை)

அண்ணன் தம்பிக்கு எழுதுவதுபோல், தங்கைக்கு ஓர் அக்காவோ அண்ணியோ எழுதக்கூடாதா? —குமாரி சரோஜா, மதுரை.

மலர் 9 இதழ் 20

15—10—1958

# குழந்தைகளே !

கண்ணன் தீபாவளி மலர் தயாராகி வருகிறது. உங்கள் உள்ளத்தைக் கவருகின்ற முறையில் அது உருவாகி வருகிறது.

இந்த இதழுக்கு அடுத்தபடியாக நவம்பர் முதல் தேதி இதழில் தீபாவளி மலரைப்பற்றி மேலும் சில விவரங்களைத் தெரிவிப்பேன். நவம்பர் 15-ஆம் தேதி இதழ் என்று தனியாக இல்லை. அதுதான் தீபாவளி மலராக வருகிறது. தீபாவளிக்கு முன்னதாகவே அது உங்களுக்குக் கிடைக்கும்.

இந்த ஆண்டு அச்சுப் பொருள்கள் எல்லாம் கிடைப்பது அரிதாக இருக்கின்றன. எனவே தீபாவளி மலரை அளவாகவே அச்சிடுகிறோம். வழக்கமான பக்கங்கள் உண்டு; பகுதிகளும் உண்டு. ஆனால் எல்லாருக்கும் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. தீபாவளி மலர் வேண்டியவர்கள் இப்பொழுதே கண்ணன் விற்பனையாளரிடம் முன்னதாகவே அட்வான்ஸ் கொடுத்துப் பெயரைப் பதிவு செய்துவிட வேண்டும். கண்ணன் காரியாலயத்துக்கே ஒரு ரூபாய் ஒரணா மணியார்டர் செய்துவிடலாம்.

கண்ணன் மலர் ரிஜிஸ்தர் தபால் மூலம் பெற விரும்புகிறவர்கள் ஒன்றரை ரூபாய் மணியார்டர் செய்ய வேண்டும்.

மலர் உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்க இதையெல்லாம் நன்றாக நினைவில் வைத்துக்கொண்டு, அதன்படி செய்யுங்கள். இப்போது பேசாமல் இருந்துவிட்டு அப்புறம் வேண்டும் என்று எழுதிப் பயனில்லை!

—ஆசிரியர்.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.



## கே. ஏ. நம்பி

நாகர்கோயிலைச் சேர்ந்த இளங் கவிஞர் நம்பி சமீபத்தில்தான் இளநங்கை ஒருவரை மணந்து கொண்டார். இண்டர் படித்துவிட்டு, விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள இந்த இளைஞர் 'சசிதேவன்' என்ற புனைபெயரில் கவிதைகள் பல எழுதியிருக்கிறார். பதினைந்தாவது வயதிலேயே இவர் எழுதிய நாட்டுப் பாடல் பற்றிய கட்டுரை ஒன்று 'சக்தி' பத்திரிகையில் வெளியாயிற்று. பின்னர் சுதேசமித்திரன் வாரப்பதிப்பிலும் தினசரி மடலிலும் இவருடைய கட்டுரைகள் வெளிவந்தன. ஆனால் கவிதையென்று தொடர்ந்து இவர் எழுத ஆரம்பித்தது கண்ணனில்தான். 'பிள்ளையாரே வாரும்' என்ற அந்த முதல் பிள்ளையார்சுழிக் கவிதையே இவருடைய திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துவிட்டது. ஆயிரக்கணக்கான குழந்தைகள் பாராட்டிப் பாடிக் களித்தார்கள். இவருடைய பாடல்களில் சோடையே அதிகம் இருப்பதில்லை. காரணம் எழுதிக் குவிக்க வேண்டும் என்று இவர் எண்ணுவதில்லை. குறைவாக எழுதினாலும் சிறப்பாக எழுத வேண்டும் என்று எண்ணுபவர் இவர். இந்த லட்சியமுள்ளவர்கள் என்றுமே வெற்றிப் பாதையில் தான் அடியெடுத்து வைக்கிறார்கள்.

# கவர்னர் சுக்தாங்கர்



மூன்னர் பீஹாருடன் இணைக்கப்பட்டிருந்த ஒரிஸ்ஸா ஆங்கில ஆட்சியின்போதே தனி ராஜ்யமாகிவிட்டது. அது தனி ராஜ்யமான பிறகு அதற்குப் புதிதாக ஒரு தலைநகரையே நிர்மாணிக்க வேண்டியதாகி விட்டது. புகழ் மிக்க ஆலயங்களைக் கொண்ட புவனேசுவரமே இப்பொழுது அதன் புதிய தலைநகரமாக உருவாகியிருக்கிறது. அந்த ராஜ்யத்தின் இப்போதைய கவர்னராக இருப்பவர் தான் யஸ்வந்த் நாராயண சுக்தாங்கர்.

இவர் விஷ்ணு நாராயண் சுக்தாங்கர் என்ற கட்டடப் பொறியியல் வல்லுநரின் குமாரராக 1897-இல் பிறந்தவர். பம்பாயிலும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலும் பயின்று பி.ஏ., எல் எல்.பி., பார்.அட்.லா பட்டங்களைப் பெற்றார். இருபத்தைந்தாவது வயதில் இந்தியன் சிவில் சர்விஸில் சேர்ந்து மத்தியப் பிரதேச சர்க்காரில் உதவிக் கமிஷனராகப் பதவி ஏற்றார். அது முதல் மத்தியப் பிரதேச அரசாங்கத்தில் பல பதவிகளையும் இவர் வகித்து, சர்க்கார் காரியதரிசியாக உயர்வு பெற்றார்.

திறமையும் அநுபவமும் மிகுந்த இவரை இந்திய வர்த்தக உதவிக் கமிஷனராக உயர்த்தினார்கள். துணைக் கமிஷனராகவும் சிலகாலம் இருந்தார். பிறகு மத்திய சர்க்காரில் உதவிக் காரியதரிசியாகவும், இந்திய டீ கன்ட்ரோலராகவும் வர்த்த இலாகா காரியதரிசியாகவும் இவர் பதவி வகித்திருக்கிறார்.

இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகு இவர் போக்குவரத்து இலாகாவின் காரியதரிசியாகவும் வர்த்தக உற்பத்தி இலாகா காரியதரிசியாகவும் இருந்து முதிர்ந்த அநுபவம் பெற்றுத் திறம்பட பணிபுரிந்திருக்கிறார். மந்திரி சபையின் ஸ்பெஷல் காரியதரிசியாகவும் திட்டக் கமிஷனில் காரியதரிசியாகவும் இவர் சிலகாலம் பதவிகள் வகித்தவர்.

இந்திய அரசாங்க நிர்வாகத் துறையில் பல பதவிகளில் பல வருஷ காலம் இருந்து தொண்டாற்றிய இவரை, கவர்னராக இருந்த பீமசேன சச்சாருக்குப் பிறகு ஒரிஸ்ஸாவின் கவர்னராக நியமித்தார்கள்.

கால்நடையாக வெகுதூரம் நடந்து செல்வதும் படிப்பதும் தேகப் பயிற்சிக் களப்பில் கலந்து கொள்வதுமே இவருடைய பொழுது போக்குகள்.




'ஜனா'

## 26. பாழும் கிணறு

'அண்ணா!' என்று அழைத்த செங்கணனுக்குத் திடீரென்று என்ன நேர்ந்துவிட்டது! ஏன் இந்தப் பயங்கர அமைதி? பேச்சு மூச்சையே காணோமே, ஏன்?

செங்கணன் அந்த இருட்டறையில் நிச்சயமாக இல்லை என்று நெடுமாறன் ஊகித்துக்கொண்டான். யாரோ அவனுடைய வாயைப் பொத்தி, அவனைச் சிறையிலிருந்து வெளியே இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று தோன்றியது.

நெடுமாறனுக்கு அந்த இருட்டறையில் குதித்துவிட வேண்டும்போல் இருந்தது. ஆனால் அது எவ்வளவு பாதாளத்தில் இருக்கிறது என்று தெரியவில்லை. மேலும் அந்தக் கிழவர் மேல் போய் விழுந்துவிட்டால் என்ன செய்வது! இந்த யோசனைகளினால் அவன் அந்த எண்ணத்தை விட்டுவிட்டு, கட்டிப் போட்டிருந்த காவற்காரனிடம் வந்தான்.

''உனக்கு விடுதலை வேண்டுமானால் உள்ளதைச் சொல்லிவிடு. அடுத்த அறைக்குப் போக வழி எது?'' என்று அவனிடமிருந்து பிடுங்கிய சாவிக்கொத்தைக் குலுக்கினான்.

''கதவைத் திறந்துகொண்டு வலது பக்கம் போ! இடது பக்கம் திரும்பு. எதிரில் ஒரு மண்டபம் இருக்கும். அதனுள் நுழைய வேண்டாம். வெளியிலேயே ஒரு படிக்கட்டுக் கீழே இறங்கிப் போவது தெரியும். அதுதான் வழி!'' என்றான் அந்த முரட்டுக் காவலாளி.

''தவறான பாதையாக இருந்தால் உன் மண்டையைப் பிளந்து விடுவேன்!'' என்று சொல்லிவிட்டு நெடுமாறன் அவன் கொண்டு வந்திருந்த கைப்பந்தத்துடன், அந்த அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்டான். இப்பொழுதுதான் சிறிது நல்ல காற்று அவன்மீது பட்டது. அவன் சொன்னபடியே

வலது பக்கம் போனான். பிறகு இருளடர்ந்த இடது பக்கமாகத் திரும்பினான். காவலாளி சொன்னது உண்மைதான். வௌவால்கள் அடையும் நெடியுடன் ஒரு மண்டபம் தென்பட்டது. வெளியிலேயே ஒரு படிக்கட்டும் இருந்தது! ஆனால் மண்டபத்தினுள் நுழைய வேண்டாம் என்று சொன்னானே அந்தக் காவற்காரன்! ஏன்?

'அப்படி என்னதான் அதனுள் இருக்கும்? பார்த்துவிட்டு வந்துதான் இந்தப் படிக்கட்டில் இறங்குவோமே!' என்று நெடுமாறன் எண்ணி மண்டபத்தினுள் நுழைந்தான். அப்பப்பா— என்ன இருட்டு! என்ன நெடி! தரையெல்லாம் ஒரே வௌவால் புழுக்கை! ஆனால், அதோ ஒரு படிக்கட்டுக் கீழ் நோக்கிச் செல்கிறதே!

மண்டபத்தினுள் போக வேண்டாம் என்று அந்தக் காவற்காரன் சொன்னானா, வெளியிலுள்ள படிக்கட்டு வழியே போக வேண்டாம் என்று சொன்னானா? அவனுக்குக் குழப்பமாகப் போய்விட்டது. அருகருகே இருக்கும் இந்தப் படிக்கட்டுகள் ஒரே இடத்துக்குத்தான் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்று அவனாகவே ஒரு முடிவு செய்துகொண்டு, படிக்கட்டுகளில் இறங்கினான்.



கொஞ்ச தூரத்தில் ஓர் அறை இருப்பது போலத்தெரிந்தது. ஆனால் அந்த இடத்தில் படிக்கட்டு மடங்கித் திரும்பிச் சென்றது. இப்படியே, 'இதோ; இதோ' என்று படிக்கட்டு, திரும்பித் திரும்பி கீழ் நோக்கிப் போய்க்கொண்டே இருந்தது. நேரே பாதாள லோகத்துக்கே கொண்டு போய் விட்டுவிடுமோ என்று அச்சப்படும் அளவுக்கு அது நீண்டுகொண்டே போயிற்று. இறங்க இறங்க வளர்ந்து சென்ற படிக்கட்டு, இறுதியாக அவனைச் சமதரைக்குக் கொண்டு போய்ச் சேர்ந்தது. அந்த இடம் போனதும் செங்கணன் இருந்த அறையை நெருங்கிவிட்ட

தாகவே எண்ணினுன் நெடுமாறன். ஆனுல் அந்த வழி நீண்டு செல்லும் நெடுங் குகையாகத் தோன்றியது.

காவற்காரன் சொன்ன படிக்கட்டு இதுவல்ல என்று இப் போதுதான் அவனுக்குத் தன் தவறு தெரிந்தது. இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு அது எங்கேதான் போய் முடிகிறது என்று கண்டறிய வேண்டாமா? புதையலைத் தேடிச் சென்ற ஒருவன், அது இருந்த இடத்துக்கு அருகில் வந்ததும் கண்களை இறுக மூடிக்கொண்டு நடந்து சென்றுனுமே! அதைப் போல ஆகி விடக் கூடாதல்லவா?

இப்படிப்பட்ட சுரங்க வழிகள் ஒவ்வொரு கோட்டை யிலும் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். ஆபத்துக் காலத்தில் எதிரிகள் வசப்படாமல் அரசர்களும் அந்தப்புரத்து ஸ்திரீகளும் இது போன்ற சுரங்கப் பாதை வழியாகக் தப்பிச் செல்வார்கள். இந்தப் பாதை கிட்டத்தட்ட காத தூரத்துக்கு மேல்கூடச் செல்வதுண்டு. அதுவும் வலிமை மிக்க காளி கோட்டை மிக உன்னதமான கோட்டைகளில் ஒன்று என்பது பிரசித்தம். சோழ அரசரின் அரண்மனையைவிட, காளிகோட்டை சிறந்து உறுதியாக அமைந்திருந்தது. ஆகவே மிகச் சிறந்த வீரர் ஒருவர் அமைத்த மிகச் சிறந்த சுரங்கப் பாதை அது என்று எண்ணியபோது அவனுக்கு ரோமாஞ்சலி உண்டாயிற்று.

கொஞ்ச தூரம் நடந்ததும் குகை வட்டமாக அகன்று காணப்பட்டது. அவன் சட்டென நின்றுன். பாதை அங்கே



இரண்டாகப் பிரிந்து சென்றது. மிகவும் குளிர்ந்த காற்று வெகு அருகிலிருந்து சிலுசிலுவென்று அடித்தது. அவன் தன்னையறியாமல் இடையிலிருந்த ஓலைச் சுருளைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். அந்த ஓலையில் இருந்த செய்திக்கும் அந்த இடத்துக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதுபோல அவனுக்குப் பட்டது. உடனே அவன் அதை அவிழ்த்து எடுத்தான். அதில், 'பாழும் கிணறு' என்று எழுதியிருந்த பாகம் மட்டுமே அவன் கண்களில் தென்பட்டது. அதற்குமேல் இருந்த எழுத்துக்களைச் சரிவரப் படிக்க முடியவில்லை. ஊன்றிப் படிக்க அதுவா சரியான சமயம்?

எனவே அவன், பிரிந்து சென்ற கிளைக் குகை வழியாக நடக்கலானான். பாதை வரவர மேல் நோக்கி உயர்ந்து செல்வதுபோல் தோன்றியது. காற்றும் வெகு அருகிலிருந்து அடிப்பதுபோல் தோன்றியது. அவன் கையிலிருந்த பந்தம் எண்ணெயின்றி, துணி எரியும் காந்தல் நாற்றத்துடன் ஒளி மங்கி வரத் தொடங்கியது. அது இருந்து பார்வையைக் கெடுப்பதைவிட, இருட்டிலேயே நடக்கலாம் என்று பந்தத்தைக் கீழே போட்டான். ஆனால் இதென்ன? அதோ வெளிச்சமாக ஓர் இடம் தெரிகிறதே! அந்தச் சுரங்கப் பாதை அந்த இடத்தில் முடிவுற்று விடுகிறதா, என்ன?

நெடுமாறன் உற்சாகத்துடன் வேகமாக நடக்கலானான். 'ஙொய் ஙொய்' சிள்வண்டுகளின் ரீங்காரம் காது வழியக் கேட்கத் தொடங்கியது.

அவன் வெளிச்சமாக இருந்த இடத்தில் வந்து நின்று, சுற்று முற்றும் பார்த்தான். அது ஒரு பாழுங் கிணறு!

அப்போது கிழக்கு வெளுக்கும் சமயமாக இருந்தது. வானத்துத் தாரகைகள் எல்லாம் மின்மினி என ஒளி காட்டி ஓய்ந்துவிட்ட நேரம். உயிர்கள் எல்லாம் உறக்கம் நீங்கி விழிக்கப் போகும் வேளை.

நெடுமாறன் அந்தப் பாழுங் கிணற்றிலிருந்து ஏறி, மெதுவாக வெளி வந்தான். பழங்காலத்தில் கட்டப்பட்ட உறை கிணறுபோல் அதன் வெளிப்புறம் தோன்றியது. அதன் வாய் மிகவும் குறுகலாக, ஒரு பாறையைப் போட்டு மூடி வைத்து விடக் கூடியதாக இருந்தது. அதை யார் இப்பொழுது பக்கத்தில் புரட்டிப் போட்டிருந்தார்களோ, தெரியவில்லை. அந்தப் பாறை அருகிலே உருண்டு கிடந்தது.

அதுவரையில் நல்ல காலம்தான் என்று எண்ணிக்கொண்ட நெடுமாறன் அது எந்த இடம் என்று பார்த்தான். அவனுடைய வியப்பு மேலும் அதிகமாகியது. தூரத்தில் காடும், காட்டின் எல்லையில் தனியே நிற்கும் ஒரு குடிசையும் தெரிந்தன. பிறகு மேலும் நிதானித்துப் பார்த்ததில் அது இளமாறனை வளர்த்த கிழவருடைய குடிசையாக இருக்குமோ என்று ஓர் ஐயம் எழுந்தது.

அவனுக்கு உடனே ஏதோ ஒரு பெரிய ரகசியத்தின் ஒளி ஒன்றைக் கண்டுவிட்டது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவன் அதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக அந்தக் குடிசையை நோக்கிச் சென்றான்.

அந்தக் கிழவருடைய குடிசைதான் அது! (தொடரும்)



# காலம் சொல்லும் கதை

கோவி. மணிசேகரன்

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியர் இப்போது உங்கள் முன்னே காட்சியளிக்கிறார். அந்தத் தூய்மை நிறைந்த காட்சியில் ஒழுக்கம் தெய்வக் களையைப் பெறுகிறது.

கடைச்சங்க காலத்துப் பாண்டியர்களுள் பூதப்பாண்டியரும் ஒருவர். இவர் கல்வியில் சிறந்த மேதை! களத்தில் சிறந்த வீரர்! இவருடைய பாடல்கள் புறநானூறு, அகநானூறு என்னும் தமிழ் இலக்கியங்களிலும் இடம் பெற்றிருக்கின்றன.

'ஒல்லையூர் தந்த' எனும் அடைமொழிக்கு ஆதாரத்துடன் கூடிய சரியான விளக்கம் இதுவரை கிடைக்கவில்லை. பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள்.

பாண்டியர்களுடைய தலைநகரங்களுள் கொற்கை என்பதும் ஒன்று என்பதை முன்பே பார்த்தோம். சிறுபாணாற்றுப்படை, அகநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் கொற்கைத் தலைநகரத்தைப்பற்றிப் பேசப்படுகிறது. மேலும் கொற்கை ஒரு துறைமுகப்பட்டினமும்கூட. முத்துக்குப் பெயர்போன இடம். இந்தத் தலைநகரை உண்டுபண்ணியதால், 'கொற்கைப் பாண்டியன்' என வழங்க நேரிட்டிருக்கலாம். அதுவே நாளடைவில் 'பொற்கைப் பாண்டியன்' என மருவி இருக்கலாம். பொற்கை புனைகதை வடிவமேற்றிருக்கலாம்.

இதேபோல்தான் பூதப்பாண்டியர்க்கும் 'ஒல்லையூர் தந்த' என்னும் அடைமொழி எவ்வாறு வந்தது என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.

பூதப்பாண்டியருடைய வீரத்தை விளக்குவதே அந்த அடைமொழி என்கிறார்கள் சிலர். மற்றும் சிலர் புதுமையின் காரணமாக ஏற்பட்டது என்று கூறுகிறார்கள். வேறு சிலர், ஒல்லையூர் என்னும் ஓர் ஊர் அந்தக் காலத்தில் நால்வகை அரண்களுடன் (1. நிலத்தையுடைய அரண், 2. நீரையுடைய அரண், 3. காட்டையுடைய அரண், 4. மலைகளையுடைய அரண்) விளங்கி இருத்தல் வேண்டும் என்றும், அது பகைவர்களால் எளிதாகத் தாக்க முடியாத அளவுக்கு இருந்திருக்க வேண்டும் என்றும், அந்த அரண்களைத் தாக்கி வெற்றிகொண்ட பூதப்பாண்டியர், ஒல்லையூரை அடைமொழியாகக் கொண்டிருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். அப்படியானால் 'ஒல்லையூர் கொண்ட பூதப்பாண்டியர்' என்றுதானே இருக்க வேண்டும்! 'ஒல்லையூர் தந்த' என்று எவ்வாறு வழங்கலாயிற்று என்ற ஐயம் ஏற்படுகிறதல்லவா?

பூதப்பாண்டியருடைய மனைவியின் பெயர் பெருங்கோப்பெண்டு



ரிக்ஷாக்காரன்: ரிக்ஷா வர்ற தில்லே. போ சாமி! அஞ்சு நூறு போட்டு வாங்கின வண்டியிலே அஞ்சணாக் கூலி கொடுக்க அழுவுறியே! வர்றது போ, சாமி? —குஞ்சு.

---

என்பது. கற்புடைத் தமிழ்ப் பெண்களின் தலைவி. கவிபாடும் திறமையுடைய தேவி. இவ்வம்மை பாடிய பாடலொன்று புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது.

மன்னரும் அரசியும் எப்போதும் புலவர் பெருமக்களுடனேயே கூடிப் பொழுதைக் கழிப்பதில் பேரின்பம் காண்பவர்கள். இவர்களுடைய புலவர் நண்பர்கள் மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தான், ஆதனழிசி, இயக்கண் ஆகியோர்.

மதுரைமா நகரைத் தலைநகராகக் கொண்டு பரந்த பாண்டிய நாட்டைப் பண்பு வழுவாமல் ஆண்டு வந்த பூதப்பாண்டியரைக் கவிழ்க்கச் சூழ்ச்சிகள் பல நடந்தன. அண்டை நாட்டு மன்னர்கள் ஒன்றுகூடி படை திரட்ட முயன்றனர். இது பூதப்பாண்டியருக்கு ஒற்றர்மூலம் தெரியவந்தது.

நாட்டு மக்கள் அச்சம் கொண்டனர். நீண்ட நாள் அமைதியுடன் வாழ்ந்த மக்கள், அச்சம் கொண்ட செய்தியறிந்தார் பாண்டிய மன்னர்: அவர்களைத் தேற்றுவது தம்முடைய முதல் பொறுப்பு என்பதை மனத்தில் கொண்டார். உடனே சபதம் நிறைந்த கவிதையொன்றைப் பாடி, நாட்டு மக்கள் மட்டுமல்ல, நாடிவரும் பகைவர்களும் அறியட்டும் என்று வெளியிட்டார். அது அன்று பலருடைய காதுகளை நிரப்பியது. இன்றும் உங்களுடைய காதுகளை நிரப்புகிறது. அது உள்ளத்தையும் பண்படுத்தி, நாகரிகத்தைப் பறைசாற்றுகிறது.

போரில் வெற்றிகண்ட பூதப்பாண்டியர், தமது உடலைப் பூமிக்கு அளித்துவிட்டார். கணவர் இறந்துவிட்டார் என்ற கலக்கத்தில் பெருங்கோப்பெண்டு உடன் கட்டை ஏறத் தயாரானார்.

புலவர்கள் பலர் தடுத்தும் பாண்டிமாதேவி கேட்டாரில்லை. அந்தப் புலவர்கள் எதிரிலேயே அரிய பாடலொன்றைப் பாடினாராம்! அந்தப் பாட்டின் சில வரிகளின் விளக்கத்தை மட்டும் உங்களுக்குச் சொல்ல விழைகிறேன்.

''பல் சான்றீரே! என்னை, என் கணவருடன் வழியனுப்பாமல் உயிருடன் இருந்து தொல்லைகளை அநுபவிக்கச் சொல்கிறீர்களே! அணில் வரி போன்ற வெள்ளிரிக்காயின் விதை போன்றதும், நெய் கலவாமல் பிழிந்த சோற்றையும், எள்ளரைத்த தொகையலுடன், புளி கூட்டிச் சமைத்த வேளைக் கீரைக் கறியையும் உண்டு, பாயின்றி, கல் படுக்கையில் படுத்து, விதவைக் கோலம் பூண்டு தவிப்பதைக் காட்டிலும் உடன் கட்டை மேலானது. விறகுகள் அடுக்கிய இந்தப் பிணப்படுக்கை உங்களுக்குக் கொடியதாயிருக்கலாம்; ஆனால், எனக்குத் தாமரைக்குளம் போன்ற தண்மையுடையதே!''

கற்பரசி பாடிய கவிதையில்தான் எவ்வளவு நிறைவான உள்ளம்! அந்தக் கற்புள்ளத்தை நேரில் கண்ட மதுரைப் பேராலவாயார் என்னும் புலவர் உள்ளமுருகிப் பாடியிருக்கிறார். இந்தப் பாடல்களெல்லாம் உங்கள் செவிக்குப் பெரும் விருந்து!

9

# பொன் மகுடம்

## எம். சீனி

'டங் டங்' கென்று எழுந்த உளி யோசை ஏகாந்தமான மலையடிவாரத்தின் அமைதியைக் குலைத்தவண்ணம் இருந்தது.

சிற்பி சித்திரபாலன் தன் சிறிய குடிசையில் கல்லைக் கலையாக்கிக்கொண் டிருந்தான்.

வெளியே வெயில் எரித்தது. அனல் பறந்தது. அதன் வெக்கையும் புழுக்கமும் சித்திரபாலனைத் தாக்கின. வியர்வை வெள்ளமாகச் சொட்டியது. அவன் சோர்ந்து விடவில்லை. மனம் தளரவுமில்லை. வேலையிலே கருத்தாயிருந்தான்.

அவனது குடிசையாகிய சிற்பக் கூடத்தில் அநேகம் அழகு உருவங்கள் அற்புதமாகச் செதுக்கி வைக்கப்பட் டிருந்தன. சிலையா அல்லது அசல் தோற்றமா என்று பார்த்தவர்கள் வியக்கும், வண்ணம் பல உருவங்கள் அழகாக அமைந்திருந்தன அவன் கை பட்டால் கல்லும் உயிர் பெற்றுவிடும்.

சித்திரபாலனின் புகழ் நாடெங்கும் பரவி யிருந்தது அவன் தந்தையும் இதே தொழில்தான் செய்து வந்தார் சிறு வயது முதலே தந்தையிடமிருந்து சிற்பக் கலையின் அமர நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டான். அவர் இறந்த பிறகு தானே அதை ஏற்று நடத்திவந்தான். தந்தையையும் மிஞ்சினன் மகன் கலைத்திறனில்.

மற்றவர்களைப் போல் செல்வத்தையோ புகழையோ விரும்பும் போலிக் கலைஞனல்ல அவன். அதிலே அவனுக்கு உயிர். பற்றும் பாசமுமெல்லாம் சிற்பங்கள்மீது தான்.

எத்தனையோ உயிர்ப் படைப்புகளைக் கல்லில் வடித்தும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இன்னுமொரு பெருங்கனவு அவனை வருத்திக்கொண் டிருந்தது.

எதைத் தன் தெய்வமாகப் போற்றி வந்தானே, எதைத் தன் உயிரும் மூச்சுமாகக்கொண் டிருந்தானே, அந்தக் கலையைத் தன் கற்பனையில் மட்டும் கண்டு களிப்பதோடு திருப்தி அடையாமல் அவளுக்கு அழியாத ஓர் உருவமும் தந்து உலகிற்குக் காட்ட விருப்பம் கொண்டான். கலையரசியை அமர ஓவியமாகக் கல்லிலே செதுக்க ஆசைகொண்டான்.

கடந்த ஆறு மாதமாகத் தன் சக்தியை யெல்லாம் அதிலே செலவிட்டு வருகிறான்.

வளைவு வேலைப்பாடுகளுடன் ஒரு மலர் ஆசனம்; அதன்மேல் பொலிவும் பளபளப்பும் மின்ன ஒரு பெண் உருவம்; கட்டான இளமை மேனி; கையில் செங்கோல்; தலையில் மகுடம். கலையின் அழகுச் செறுக்கு அவள் முகத்திலே வரையப்பட் டிருந்தது. இதழ்களில் புன்னகை அலட்சியமாக வெளிப்பட அரசிபோல மிடுக்குடன் அமர்ந்திருந்தாள்.

சித்திரபாலன் தன் பெருங் கனவைச் செயலாக்கிக் கொண்டான். ஆறு மாத உழைப்பின் எல்லையைத் தொட்டுவிட்டான். பளிங்கு மெருகேற்றும் வேலை மட்டுமே இன்னும் பாக்கி. அதுவும் முடிவடைந்துகொண் டிருந்தது.

தூரத்தே குதிரையின் குளம் பொலிகள் கேட்டன சத்தம் அருகநகே நெருங்கி வந்துகொண் டிருந்தது. குடிசையின் வாசலுக்கு வந்ததும் பெருங் கனைப்புடன் குதிரை நின்றது. அரண்மனைச் சேவகனொருவன் கீழே இறங்கினன். கதவு தட்டப்பட்டது.

''சித்திரபாலா . சித்திரபாலா!''

''யாரது? உள்ளே வரலாம்.''

''நான் அரண்மனையிலிருந்து வருகிறேன்''

''வரலாமே. .''

சிற்பியின் அலட்சியமான பதில் சேவகனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஒரு சாதாரணமான சிற்பிக்கு இவ்வளவு கர்வமா என்று நினைத்தான் சேவகன். சிற்பியின் தன்மையை அவன் தெரிந்து கொள்ளவில்லை.

அவனுக்கு அவன்தான் அரசன். ஆனால் கலா தேவியின் பக்தன். வேறு யாரும் நிகரில்லை. கலைஞர்களிடம் இருக்கும் செல்லமான கர்வமும், சுதந்தர ஆர்வமும் அவனிடமு மிருந்தன.

தான் வந்த செய்தியைச் சொன்னான் சேவகன்.

''நாட்டின் அரசி சித்திரபாலனின் சிற்பங்களைப் பார்வையிட வருகிறாள். பரிவாரங்களோடு



வந்துகொண் டிருக்கிறாள். அவள் தனக்குப் பிரியமான சிற்பங்களை மிகுந்த விலை கொடுத்து வாங்கக் கூடும்.''

இந்த மகத்தான செய்தி சித்திரபாலனைப் பரபரப்படையச் செய்யும் என்று எண்ணினான் அந்தச் சேவகன்.

அவனா? அந்தக் கலை மன்னன் யாருக்கு மசிகிறான்?

''அரசியா? வரட்டுமே..வரவேற்கிறேன்!''

மிகவும் அலட்சியமாகச் சொன்னான். புதுமையாக ஒன்றும் நடந்து விடாததுபோல மீண்டும் வேலையில் ஈடுபட்டுவிட்டான்.

கையில் கால் காசு கிடையாது. வயிறும் காய்கிறது. இருந்தும், பசி கலைமீதுதானே யொழிய வயிற்றிலல்ல.

''சுத்தப்படுத்து. அடுக்கிவை!'' என்று அவசரப் படுத்தினான் சேவகன். குடிசை யெங்கும் சில்லுகள் சிதறிக் கிடந்தன. உடைந்த கற்களும் மழுங்கிய உளிகளும் வேண்டாத சுத்தியல்களும் எங்கும் அவலட்சணத்தைப் பரப்பின.

இந்த மோசமான சூழ்நிலை மத்தியில் சேற்றில் செந்தாமரைபோல அவனுடைய சிற்பங்கள் அழகுடன் நின்றிருந்தன.

அவன் ஒன்றையும் சுத்தப் படுத்தவில்லை. அதற்குள் அரசியும் வந்து விட்டாள்.



சித்திரபாலன் எழுந்து சென்று வாசலில் அரசியை வரவேற்று உள்ளே அழைத்து வந்தான். தன் சிற்பங்களை ஒவ்வொன்றாகக் காட்டிக் கொண்டு வந்தான்.

அரசி ஏற்கனவே அவன் திறமையைக் கேள்விப்பட்டிருந்தாள். இருந்தும் அவற்றை நேரில் பார்க்கிற பொழுது அவளது வியப்பு ஆயிரம் மடங்காகப் பெருகியது.

பயங்கரமாய் வாய் திறந்து நிற்கும் யாளி! சிங்கத்தைப் பிடித்து அடக்கும் வீரன்; கூத்தனின் திரு நடனம்; சலங்கை துஞ்ச கால் தூக்கி நிற்கும் நடன மங்கை; இப்படி ஒவ்வொரு சிலையாகப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள்.

கடைசியாகக் கலையரசியின் சிலையும் வந்தது. பார்த்ததும் அப்படியே சிலையாக நின்றுவிட்டாள். இமைகள் துடிக்க

வில்லை. உதடு அசையவில்லை. அசந்து போனாள்.

திடீரென மகிழ்ச்சி மாறியது. முகம் கறுத்தது. பார்வை கோப மாக மாறியது.

''சித்திரபாலா, உன் கைத் திறமை நன்றாயிருக்கிறது. நான் பாராட்டுகிறேன். ஆனால் உன் கற்பனையில் தவறு நேர்ந்து விட்டது. இந்தப் பெண் சிலையின் தலைமேல் மகுடம் ஏன் வைத்தாய்? இது அரசிகள் மட்டுமே அணியத் தக்கது. இந்தச் சிலையில் அது இருக்கக் கூடாது!'' ஆத்திரத் துடன் கூறினாள்.

சித்திரபாலன், திடுக்கிட்டுப் போனான். எதிர்பாராத விமர்சன மல்லவா? பணிவாகத் தன் கருத்தை வெளியிட்டான்.

''இது சாதாரண சிலையல்ல, தேவி. மற்றப் பெண்களைப் போன்ற பெண் உருவமல்ல. கலையையே பெண் உருவாகக் காட்டியிருக் கிறேன். இவள் கலையரசி!''

''நாட்டில் ஓர் அரசிதான் இருக்கமுடியும். அது நான்தான். மற்றவை யெல்லாம் எனக்குக் கீழ்ப்பட்டதே.''

அந்த வார்த்தைகள் சிற்பியின் தன்மானத்தைத் தட்டியெழுப் பின. கோபமாகப் பதில் சொல்ல உதடுகள் படபடத்தன. தன்னை அடக்கிக் கொண்டான்.

''கலைஞனுக்குக் கலைதான் அரசி!'' நிதானமாக அழுத்திச் சொன்னான். அதில் ஆழ்ந்த உறுதி தொனித்தது.

அரசி புரிந்துகொண்டாள். தன் கர்வத்தைச் சாதிக்க வேறு வழி தான் ஏற்றது என்று எண்ணினாள்: சிரித்தாள்

''சிற்பியே. உன் நாட்டு அரசியை மனம் நோக வைப்பதில் உனக்கு விருப்பமா? தவறு நடந் தது, நடந்துவிட்டது இப் பொழுதுகூடச் சரிப்படுத்திவிட லாம். உன் சிற்பம் அற்புதமா யிருக்கிறது. அந்த மகுடத்தை மட்டும் எடுத்துவிடு. இன்னும் அழகாயிருக்கும். என் அன்புப் பரிசையும் பெற்றுவிடும். என்ன சொல்கிறாய்?'' கனிவுடன் தந்திர மாகக் கேட்டாள் அரசி.

சித்திரபாலனுக்குப் பெரும் குழப்பமாய்ப் போய்விட்டது. தன் எதிரே நிற்கும் வல்லமை மிக்க நாட்டின் அரசியைப் பகைத்துக் கொள்வதா? தெய்வமென உள்ளத் தில் தொழுதுவரும் கலையரசிக்குத் துரோகம் செய்வதா? எதைச் செய்வது? சிந்தித்துக் குழம்பினான்.

மனம் ஒரு முடிவிற்கு வந்தது. தான் உயிரெனப் போற்றிவரும் கலைக்குத் தானே துரோகம் செய் வதா? கேவலம் அழிந்துபோகும் மானிடப் பெண்மணியை மகிழ்விப் பதற்காகக் காலங் காலமாய் அழி யாது ஆட்சி செய்துவரும் கலை யரசியைக் கேவலப்படுத்துவா?

''முடியாது அரசி, முடியவே முடியாது! என் கலையரசியும் மகுடம் அணியத் தகுந்தவளே. அவள் சிரசிலிருந்து அது எடுபட நான் அனுமதிக்கமாட்டேன்.'' முடிவாகக் கூறிவிட்டான் சிற்பி.

''சித்திரபாலா, யோசித்துச் சொல். உன் அற்புதமான கலையர சியை நானே வாங்கிக்கொள் கிறேன். அரண்மனையில் யாவரும் பார்க்கும்படி ஆடம்பரமாக அழகு படுத்தி வைக்கிறேன். உனக்கு ஆயிரம் பொன் தருகிறேன். மகுடத்தை மட்டும் எடுத்துவிடு.''

பொன்..! பணம்! கேவலம் இவற்றிற்காகவா அவன் இத்தனை நாள் சிரமப்பட்டு உழைத்தான்? உணவை வெறுத்தான்? உறக் கத்தை மறந்தான்? அந்தச் சொல் அவனை இழிவு படுத்தியது போலி ருந்தது. அவனது கலையுள்ளத் தைக் குத்திக் காயப்படுத்தியது. பொங்கியெழுந்தான்.

''இந்த நாட்டையே தருவதா யினும் நான் சம்மதிக்க மாட் டேன். என் தேவியின் மகுடத்தை என்முன் யாரும் இறக்க முடியாது. நான் அனுமதிக்க மாட்டேன்.''

அரசிக்குக் கோபம் அதிகரித் தது:

''இதற்கு என்ன தண்டனை தெரியுமா? அரசகுலத்தையே அவ

மதிக்கும் பெரிய குற்றமாகும் இது. இதற்கு மரணதண்டனைதான் கிடைக்கும்.''

சித்திரபாலன் இப்பொழுது சிரித்தான்.

''நான் ஏற்றுக் கொள்கிறேன். என் கலையரசிக்கு நான் செலுத்தும் அற்பமான காணிக்கை இது. இப்பொழுதே நிறைவேற்றுங்கள்!''

அரசி சிறிது நேரம் வெறுப்போடு பார்த்து நின்ருள். கண்கள் சிவந்து தணலாக ஒளி வீசின. கோபத்தோடு குடிசையை விட்டு வெளியேவந்தாள். குதிரைமீது ஏறிப் போய்விட்டாள்.

'என்ன தண்டனை உத்தரவாகப் போகிறதோ, பாவம்!.. அப்பாவிச் சிற்பி இன்ருேடு ஒழிந்தான்' என்று யாவரும் அவனுக்காக அநுதாபப் பட்டார்கள்.

சிறிது நேரத்தில் மீண்டும் குடிசையின் முன் குதிரையின் குளம் பொலி கேட்டது. வந்தவள் அரசிதான்.

சித்திரபாலன் எழுந்து சென்று ஏன் என்றுகூடக் கேட்கவில்லை.

அரசி உள்ளே வந்ததும் சிறிது நேரம் தயங்கி நின்ருள்.

''சித்திரபாலா, இப்பொழுதும் கேட்கிறேன், மகுடத்தை எடுத்து விடு.'' மெதுவாகக் கேட்டாள்.

கர்வம் பொங்கக் கேலியாகச் சிரித்தான் சிற்பி.

''அதுதான் கூறிவிட்டேனே!''

''நான் புரிந்து கொண்டேன் கலைஞனே. கலை என்னிலும் மேலாகனது. அதில் சிறிதும் சந்தேகமில்லை. நான் நாளையே இறந்து போகக்கூடியவள். அது அழிவற்றது. அது என்னிலும் மேலானது என்பதால்தானே தன்னைப் பார்க்க என்னை இங்கே அழைத்து வந்து விட்டது. இந்த உண்மையை நான் வழியில்தான் புரிந்து கொண்டேன். உடனே திரும்பிவந்து விட்டேன். என்ன சொல்லுகிருய்?''



பையன்-1: நான் அடிக்கடி ஆற்றில் மூழ்கி இறப்பதுபோல் கனவு காண்கிறேன். என்ன செய்யலாம்?

பையன்-2: பேசாமல் நீந்தக் கற்றுக்கொண்டுவிடு. அதுதான் சரியான வழி!

—குஞ்சு.

சித்திரபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''நம் அரசிக்குக் கல்லிஞல் செய்த சாதாரண மகுடம் வேண்டாம். நானும் என் பங்கிற்குப் பெருமைப் படுத்துகிறேன். அந்தக் கல்லை எடுத்துவிடு. என் பொன் மகுடத்தைச் சூட்டிப் போற்றுகிறேன்.'' என்ருள் அரசி.

சித்திரபாலன் இப்பொழுது உற்சாகமாக வேலை செய்தான். கண்..கண்ணென்று உளி ஓசை எழும்பியது. கலையரசியின் தலையில் பொன் மகுடம் மின்னியது.

அரசி ஆயிரம் பொன் கொடுத்து அதை வாங்கிக் கொண்டாள். சிற்பியிடம் பணிவாக விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

இரு அரசிகளையும் தன் விழி நிறையப் பார்த்து மகிழ்ந்து நின்ருன் சித்திரபாலன்!

# சமைப்பவருக்கே சொந்தம்...

ஏ. வி. எம். ஹாஜா

மாலைநேரம். காற்ருட உலவி வர ஆற்றங்கரையை நாடினேன். ஆற்றங்கரை மணற் பரப்பில் அமர்ந்து, சிந்திக்க ஆரம் பித்தேன். வேப்பம் பூக்கள் நறு மணத்தை அள்ளி வீசிக்கொண் டிருந்தன. 'சிலு சிலு' வென்று காற்று இதமாக இருந்தது.

அப்பொழுது சற்றுத் தொலைவில் ஒரு கூட்டம். அரசியல் கூட்டமாக யிருக்கலாம். அல்லது அடுக்குத் தொடரில் அர்த்தமில்லாமல் கனல் கக்கப் பேசும் புரட்சி வாதியாக இருக்கலாம். தமிழ்நாட்டில் எங்குப் பார்த்தாலும் இப்பொழுது மா நாடுகளாகத்தானே காட்சியளிக் கின்றன!

பாரதியார் பாடல் ஒன்று அப் பொழுது என் நினைவுக்கு வந்தது.

''நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறனும் இன்றி
வஞ்சனை செய் வாரடி—கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி!''......

இப்பாட்டு, இந்தக் காலத்துக்கு உரியதாகத்தானே இருக்கிறது? பெரும்பாலும் வாய்ச் சொல்லில் தான் வீரராக இருக்கிருர்களே தவிர, செயலில் ஒரு வீரத்தையும் காட்டவில்லையே!...

அப்பொழுது என் அடுத்த வீட்டு நண்பர் அவ்விடம் வந்தார். அவர் 'வழவழ' ஆசாமி. எல்லோரை யும் தாக்கிப் பேசினுல்தான் அவ



ருக்கு அன்று உண்ட உணவு ஜீரணமாகும்!..

"என்ன சார்..அங்கே கூட்டம்?" அந்த நண்பர் வினவினுர்.

"ஏதாவது அரசியல் கட்சிகள் அர்த்தமில்லாமல் அளந்து கொண்டிருக்கலாம்!" என்றேன் நான்.

"ஆமாம் சார்! நம் நாடு நிரம்பவும் கெட்டுப்போய் விட்டது. மேல் நாடுகளில் பாருங்கள், அங்கெல்லாம் குறிக்கோளுக்காகக் கட்சிகள் அமைத்து இருக்கிருர்கள். ஆனல் இங்கே குட்டலுக்காகவும் புகழுக்காகவும், புதுப் புதுக் கட்சிகளே அமைக்கிருர்கள்!" அவருடைய கருத்து வரவேற்கத் தக்கதுதான். அவருடைய கருத்தைக் கேட்டுவிட்டுப் புகழவோ, கைதட்டவோ என்னைத் தவிர வேறு யாருமில்லை.

"உண்மைதான் சார்!" என்று ஆமோதித்துவிட்டு, எப்படி இவரின் 'வழ வழா'ப் பேச்சிலிருந்து தப்பிப்பது என்று சிந்திக்க ஆரம்பித்தேன்.

நல்ல வேளை! அவரே தமக்கு முக்கிய வேலை இருப்பதாகக் கூறிவிட்டு நடந்தார். ஒரு கண்டத்திலிருந்து தப்பித்து விட்டோம் என்று உள்ளுணர்வு உணர்த்தியது.

சற்றுத் தூரத்தில் கூடியிருந்த கூட்டத்திலிருந்து கைதட்டல் விண்ணைப் பிளந்தது. எனக்கும் அது என்ன கூட்டம் என்று அறிய ஆவல் உள்ளத்தில் ஊடுருவியது. உடனே எழுந்து கூட்டத்தை நோக்கி விரைந்தேன்.

என்ன ஆச்சரியம்! அந்தக் கூட்டத்திலுள்ளோர் அனைவரும் சமையற்காரர்கள். ஏன், எங்கள் வீட்டுச் சமையற்காரன்கூட ஒரு மூலையில் நின்றுகொண்டு கைகொட்டிக் கரகோஷம் செய்து கொண்டிருந்தான். வியப்பு வெள்ளம் உள்ளத்தில் அணைபுரண்டோடியது. ஆனல் அடுத்த விநாடி..?

ஆம்! மேடையில் காரசாரமாகப் பேசுவது யார் தெரியுமா? கலெக்டர் கற்பகநாதன் வீட்டுச் சமையல்காரன்! எனக்கோ வியப்பு! வியப்பு! வியப்பு! அரசியல் என்ருல் வீசை என்னவென்று கேட்கும் எங்கள் வீட்டுச்சமையற்காரன் கைகொட்டி, கரகோஷம் செய்வதென்ருல் இதில் ஏதோ விசேஷம் இருக்கத்தானே செய்யும்? ஆனல் அடுத்த கணமே அதில் உள்ள விசேஷம் எனக்கு விளங்கிவிட்டது. மாநாட்டின் முன்னே, ஒரு பலகையில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது:





''டேய், இன்னிக்கு ராத்திரிக்கு மாட்டினிஷோவுக்குப் போகலாமாடா?''

''மாட்டினி ஷோன்னு என்னுடா?''

''இது தெரியாதாடா, சண்டைப் படம்!''

—''விண்மணி''

---

''சமைப்பவருக்கே சாப்பாடு சொந்தம்!''

அப்படியென்றால் நம் கதி? எல்லா வேலைக்காரர்களுக்கும் ஒவ்வொன்றும் சொந்தமானல் நம் நிலை? கடைசியில் திருவோடு தூக்கிக்கொண்டு தெருத் தெருவாக அலைய வேண்டியதுதான்!

''தோட்டக்காரனுக்குத் தோட்டமே சொந்தம்!''

''துணி துவைப்பவருக்குத் துணிகள் சொந்தம்!''

இப்படிப்பட்ட புரட்சிகள் இனி ஏற்படாமலா இருக்கும்? இவைகளுக்கு எல்லாம் ஒரு முடிவுஎன்ன?

மேடையில் பேசிச் கொண்டிருந்த கலெக்டர் வீட்டுச் சமையற்காரனின் வார்த்தைகள் தீப்பொறிபோல் கனன்று எழுந்து கொண்டிருந்தன.

''..ஆகவே தோழர்களே! நாம் எதற்கும் பயப்படக்கூடாது நூறு வடைகள் ஒரு நாளைக்குச் செய்தால், அதில் அறுபது வடைகளை நாம் தாராளமாக நம் வீடடுக்கு அனுப்பி வைக்கலாம். நாளையே நாம் சம்பளத்தைக் கூட்டிக் கேட்க வேண்டும். தர மறுத்தால் வேலை நிறுத்தம் செய்யுங்கள்! அவர்கள் உங்களை விலக்கினல் வேறு எந்தச் சமையற்காரனும் அந்த வீட்டிற்கு வேலைக்குப் போக மாட்டான். ஏனெனில் நாமெல்லாம் ஐக்கியமாகி விட்டோம். நம் ஒற்றுமை குலைபடக் கூடாது. நம் எஜமானர்கள் நம்மிடம் மரியாதையாக நடக்கும்படி செய்தல் வேண்டும். எனவே, 'சமைப்பவருக்கே சாப்பாடு சொந்தம்' என்று அவர்கள் காதில் கேட்கும்படி கூறுங்கள். பயப்படாதீர்கள்! இரு நூறு ஆண்டுகள் ஆட்டு மந்தைகளாய் வாழ்ந்தாலும், இரண்டு ஆண்டுகள் சிங்கமாய் வாழுங்கள்!..''

அவன் பேச்சு மிளகாய் நெடி போல் எங்கும் பரவியது. எனக்கோ பயமாகிவிட்டது. நாளையே, அப்பாவிடம் சொல்லி மரியாதையாய் எங்கள் சமையற்காரனுக்குக் கணக்குத் தீர்த்துவிட்டு ஹோட்டல் சாப்பாடாவது கொஞ்சம் நாட்களுக்குச் சாப்பிடலாம். பிறகு ஊர் போயிருக்கும் அத்தை வந்துவிட்டால் ஒரு கவலையும் இல்லை என்று எண்ணியவண்ணம் வீட்டை நோக்கி விரைந்தேன்.

அப்பொழுது எனக்கு ஒரு யோசனை எழுந்தது. சமைப்பவருக்குச் சாப்பாடு சொந்தமானல், சம்பாதிப்பவருக்குத்தானே பணம் சொந்தம்! எழுத்தாளர்கள் அனைவரும் ஒன்று கூடி, ''எழுதுபவனுக்கே பத்திரிகை சொந்தம்!'' என்ற புரட்சியை ஏற்படுத்தினல் என்னவாகும்?

ஆசிரியரே ஆண்டவனைப்போல் பல நாமங்களுடன் எழுதி நிரப்பி விடுவார், இல்லையா?



# பண்பு

'அன்புமணி'

'இ. போ. ச.' எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பஸ் அந்த ஸ்டாப்பில் வந்து நின்றதும் அங்கே கூடியிருந்த பிரயாணிகள் முண்டியடித்துக்கொண்டு அதைநோக்கிப் பாய்ந்தனர். இந்தப் போராட்டத்தில் ஈடுபடமுடியாத ஒரு பிரயாணி ஒதுங்கி நின்றுகொண்டார். ''இதில் போவது சங்கடம்!'' என்ற சிந்தனை அவர் மனத்தில் தோன்றியது. பாவம், கிழவன்!

காலையில் ஆறு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டவர் அந்தக் கிழவர். இதுவரை ஒன்றுமே சாப்பிடவில்லை. ஆஸ்பத்திரி 'கியூ'வில் நின்று மருந்து வாங்கிக்கொண்டு வருவதற்குள் பத்து மணியாகிவிட்டது. அப்போதிருந்து பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். இப்போதே பன்னிரண்டு மணியாகிவிட்டது. இனி அடுத்த பஸ் வருவதற்குள் உயிர் போனாலும் போய்விடும். அதனால் எப்படியாவது இந்தப் பஸ்ஸிலேயே போய்விடலாம் என்று எண்ணிக்கொண்டு கடைசிப் பிரயாணியாக அந்தப் பஸ்ஸுக்குள் நுழைந்தார். போகிற உயிர் எப்படிப் போனால்தான் என்ன என்பது அவர் எண்ணம் போலும்!

உள்ளே நெருப்புப் பெட்டியில் குச்சிகளை அடுக்கியதுபோல் பிரயாணிகள் அடைபட்டுக் கிடந்தார்கள். ஒவ்வோர் ஆசனத்திலும் மூன்று மூன்று பேர்! ஒரே ஓர் ஆசனத்தில் மட்டும் இரண்டுபேர். கிழவர் அந்த ஆசனத்தை நெருங்கி அதில் உட்கார்ந்திருந்த மகானுபாவர்களை இரக்கமாகப் பார்த்தார். உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் அவரைப் பார்த்தும் பார்க்காததுபோல் சட்டென்று தான் வைத்துக்கொண்டிருந்த ஆங்கிலப் பத்திரிகைக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டார்.

மற்றவர் கிழவரை ஒரு தடவை முறைத்துப் பார்த்துவிட்டு, காலை இன்னும் கொஞ்சம் அகட்டி 'ஜம்' என்று உட்கார்ந்தார்.

''தம்பி! நின்று கொள்ள முடிய வில்லே. வருத்தவாளி. கொஞ்சம் உட்கார்ந்துகொள்ள இடம்..'' இரைக்க இரைக்கப் பேசினர் கிழவர்.

''இங்கே இடமில்லை, ஐயா! பின்னலே போ!'' சள்ளென்று விழுந்தார் அந்த மூக்குக் கண்ணுடி ஆசாமி. பேப்பர் ஆசாமி இத்தனைக்கும் அசையவேயில்லை!

கிழவர் மேலே ஒன்றும் பேச வில்லை. கல் கல் என்று இரண்டு தடவை இருமிவிட்டுப் பின்னுக் குப் போய், வௌவால் ஆசனம் செய்யத் தொடங்கினர். (அதாவது மேலேயிருந்த கம்பியைப் பிடித்துக் கொண்டு தொங்கினர்!)

''ரைட்!'' என்ற கண்டக்டரின் மந்திரக் குரல் கேட்டதும் பஸ் புறப்பட்டது!

மிஸ்டர் மூக்குக் கண்ணுடி பேப் பருடன் பேச ஆரம்பித்தார்.

''இந்தக் கிழங்களுக்கு வயதானல் முறையே தெரிவதில்லை! எப்படிக் கொஞ்சமும் மரியாதை இல்லாமல் வந்து தொந்தரவு கொடுத்தார் பார்த்தீர்களா?''

''ஆமாமாம்! பொதுவாக நம்ம நாட்டவர்களுக்கே கொஞ்சமும் சந்தர்ப்பம் தெரியாது. நாகரிகமும் இல்லை. பண்பும் இல்லை!''

''ஆமாம், ஆமாம். அதற்கு வெள்ளைக்காரன்தான் மனிதன். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கு!''

''உண்மையான வார்த்தை! இவர்கள் பெண்களையே கௌரவிப்பதில்லையே! இப்பவும் யாராவது பெண்கள் ஏறினல் என் இடத்தை உடனே கொடுத்து விட்டு நான் எழுந்து நிற்பேன்.''

''அது பண்பு! அது எல்லோருக் கும் இருக்குமா?''

இதற்குமேல் அவர்களுடைய மணிப்பிரவாளச் சம்பாஷணை பல விஷயங்களுக்குத் தாவி, அமெரிக்க, ஐரோப்பிய, ரஷ்ய நாகரிகங்களை யெல்லாம் ஓர் அலசு அலசிவிட்டு இன்றைய அரசியலுக்கு வந்த போது, ''ஹோல்டான்!'' என்று குரல் கொடுத்தார் கண்டக்டர். பஸ் நின்றது.

ஒரு வயதான மூதாட்டி தலையில் ஓர் ஓலைப் பெட்டி நிறையச் சாமான்களுடன் உள்ளே நுழைந்தாள்.

''ஸ்திரீகளுக்கு இடம் கொடுப்பேன்'' என்று பேசிய நபருடைய பாதரட்சை அந்தச் சமயம் ஏதோ தொந்தரவு கொடுத்தது. உடனே அவர் தலையைக் குனிந்துகொண்டு அதைச் சரிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்!

இதற்குள் கிழவி பின்னல்போய் கீழே குந்திக்கொண்டாள்.

பஸ் மீண்டும் புறப்பட்டதும், இதுவரை 'புட் போர்'டில் நின்று கொண்டிருந்த ஒரு 'டிப் டாப்' ஆசாமி உள்ளே நுழைந்தார். நமது கண்ணுடி ஆசாமி அவரைப் பார்த்தாரோ இல்லையோ, ''ஹல்லோ! யூ கான்ட் சிட் ஹியர்!'' என்று அபயம் கொடுத்தார்.

வந்தவர் ''தாங்ஸ்!'' என்று நாசூக்காகச் சொல்லிவிட்டு இவரையும் ஒரு பக்கம் ஒதுக்கித் தள்ளிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். யாராவது தெரிந்தவராக்கும் என்று அவருடைய நண்பர் முதலில் நினைத்தார். ஆனல் அவர்களுடைய சம்பாஷணையின் தோரணையைக் கவனித்த பிறகு தான் அவர்கள் இதற்குமுன்னே அறிமுகமில்லாதவர்கள் என்று தெரிய வந்தது.

வந்தவர் பஸ்ஸில் ஏறிய பிறகும் தன்னுடைய 'கூலிங் கிளா'ஸைக் கழற்றவில்லை. ''அப்பப்பா! என்ன வெயில்!'' என்று கூறியவாறு கைக்குட்டையை எடுத்து மெல்ல முகத்தைத் துடைத்துக் கொண்டார். பின்னர் தம் 'கல் பாய்'த் தொப்பியைக் கழற்றி இலேசாக விசிறத் தொடங்கினர்.

''வெயில் என்ருல் சரியான வெயில். 'ஸ்கார்ச்சிங் ஹீட்' மனிதர்களை வெளியில் நடமாடவே விடுவதில்லை!'' வந்தவருக் குப் பரிந்துகொண்டு வெயிலையும் மழையையும் திட்டுத் திட்டென்று திட்டினர் மிஸ்டர் கண்ணுடி.

பின்பு அவரே புது ஆசாமியிடம் வலியப் பேச்சுக் கொடுத்தார்.

''நீங்கள் முன்னே கொழும்பில் வேலை பார்த்திருக்கிறீர்களா?''

''ஆமாம் கொஞ்ச நாள்தான்.''

''நான் நினைத்தேன். அப்புறம் எங்கே காணவில்லை?''

''பிறகு கொஞ்ச நாள் பம்பாய்க்குப் போயிருந்தேன். அங்கே கொஞ்சநாள் இருந்துவிட்டுப் போன மாதந்தான் இங்கே வந்தேன்.''

''பம்பாயில் என்ன விஷயமாக..''

''அங்கே என் மாமனார் கந்தவனம் 'குட்ஸ்' ஏஜண்டாக இருக்கிறார்!''

''அடாடாடா! மிஸ்டர் கந்தவனத்தின் மருமகனா நீ? நமக்கு ரொம்ப வேண்டியவராச்சே!''

அதன் பிறகு அவர்கள் சம்பாஷணை எங்கெல்லாமோ சுற்றிவிட்டு, கடைசியில் அந்த டிப்டாப் ஆசாமி நமது கண்ணாடி ஆசாமிக்கு நெருங்கிய உறவினர் என்பதில் வந்து முடிந்தது. அவர்கள் சம்பாஷணையில் பண்பும் பாசமும் கலந்து மிளிர்ந்தன. அண்ணன் தம்பிகூட அவ்வளவு அந்நியோன்னியமாகப் பழகியிருக்கமாட்டார்கள். ஒருவருக்கொருவர் தம் உயிரையே கொடுத்துவிடுபவர்கள் போலப் பேசிக்கொண்டார்கள்.

இடையில் ஒரு 'ஸ்டாப்'பில் பஸ் நின்றபோது ஸூட் ஆசாமி இறங்கிக்கொண்டார். நண்பர்கள் இருவரும் பிரியமுடியாமல் பிரிந்தனர். ஏதோ பெரிய காரியாலயத்தில் நீண்டநாள் சேவை செய்த உத்தியோகஸ்தருக்குப் பிரியாவிடை கொடுத்தனுப்புவதுபோல் நடந்துகொண்டார் மிஸ்டர் கண்ணாடி.

பஸ் புறப்பட்டது. இதுவரை மறந்துபோயிருந்த பழைய நண்பர் இப்போதுதான் அவர் கண்ணில் பட்டார். அவரிடம் தம்முடைய புது நண்பருடைய பெருமைகளைப் பற்றி அளக்கத் தொடங்கிவிட்டார் இவர். அவரும் இவர்



பேச்சுக்குத் தலையை ஆட்டிக் கொண்டு வந்தார்.

அடுத்தபடியாகப் பஸ் ஸ்டான்டிலேயே வந்து நின்றது. அத்துடன் அதன் பிரயாணம் முடிந்தது. வழி நெடுக ஒவ்வொரு பஸ் ஸ்டாப்பிலும் பிரயாணிகள் இரண்டொருவராக இறங்கிக் கொண்டு வந்ததால் இப்பொழுது பஸ்ஸில் நாலைந்து பேர்கள் மாத்திரமே இருந்தனர்.

கண்டக்டர் கொடுத்த டிக்கட்டுக்குப் பணம் கேட்க வந்தார். ('பெரிய' மனிதர்களிடம் இறங்கும்போதுதான் கட்டணம் வசூலிப்பது அந்தக் கண்டக்டரின் வழக்கம்!) நமது கண்ணாடி ஆசாமி வெகு அலட்சியமாகச் சிகரட்டைப் புகைத்தவாறே பணத்தை எடுத்துக் கொடுத்..ஆ! ஆ! ஏன் அவர் முகம் அப்படி மாறுகிறது? இரண்டு சட்டைப் பைகளுடனும் ஏன் இப்படித் துவந்த யுத்தம் செய்கிறார்? ஏன் இப்படி விழிக்கிறார்?

''அடாடா! மணிபர்சைக் காணோமே!'' என்று அவர் கூறிய போது அவர் குரலிலேயே அசடு வழிந்தது.

''என்னது? மணிபர்ஸைக் காணோமா? நன்றாகப் பாருங்கள்!'' என்று அவருக்கு ஒத்தாசை செய்தார் அவர் நண்பர்.

''நான் அப்போதே நினைத்தேன், ஸார்! அந்த ஸூட் ஆசாமி பலே பேர்வழி! ஒண்ணாம் நம்பர் பிக்பாக்கட்!'' என்று ஓர் அணுக்குண்டைத் தூக்கிப் போட்டார் கண்டக்டர்.

''அடாடா, அப்படியானால் நீ ஏன் இதை அப்போதே எனக்குச் சொல்லவில்லை?''

''நீங்கள் பேசிக்கொண்டிருந்த மாதிரியைப் பார்த்தால் இதைச் சொல்ல எனக்கு மனம் வரவில்லை. அதனாலென்ன, அவர் உங்களுடைய உறவினர்தானே! அவர் வீட்டுக்குப் போய்ப் பர்ஸைக் கேட்டால் போச்சு!''

''அவன் நாசமாப் போக! அவனை யாரென்றே எனக்குத் தெரியாது. ஏதோ பெரிசா அளக்கிறானே என்று சும்மாப் பேச்சுக்கு ஆமாம் போட்டேன்!''

''சரியாப் போச்சு. இப்போ பஸ் கட்டணத்துக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?''

''அதுதான் யோசிக்கிறேன்!'' என்றவாறே தன் பழைய பஸ் நண்பரின் முகத்தைப் பார்த்தார் நமது கதாநாயகர்!

அந்த நண்பர் தமது கைக் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''ஆகா! டைம் பாஸ்டு! டைம் பாஸ்டு! அப்போ நான் வருகிறேன், ஸார்!'' என்று கூறியபடி பதிலுக்குக்கூடக் காத்திராமல் நடையைக் கட்டினார்.

நமது கதாநாயகர் திரு திருவென்று விழித்துக்கொண்டிருக்கும்போது 'கம் கம்' என்று இருமியபடி அப்போதுதான் பஸ்ஸிலிருந்து இறங்கினார் ஆரம்பத்தில் பஸ்ஸில் ஏறிய கிழவர். அவர் கண்களைச் சுருக்கி நமது கதாநாயகரை ஒரு தடவைப் பார்த்துவிட்டு, ''என்ன தம்பி, நீங்களும் இங்கேதான் இறங்கினீர்களா? இரண்டுபேரும் ஒரே இடத்துக்குத்தான் வந்திருக்கிறோம். ஏன் நிற்கிறீர்கள்? போவதானால் வாருங்களேன்'' என்றார்.

கண்டக்டர் குறுக்கிட்டு ஏன் அவர் போகமுடியாமல் நிற்கிறார் என்பதை விளக்கினார்.

''அதற்கென்ன தம்பி, நான் கொடுக்கிறேன் உங்கள் பணத்தை. நீங்கள் பிறகு கொடுங்கள்'' என்று கூறியபடியே தன் மடியிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டுத் தாம் இருக்கும் இடத்தையும் சொன்னார் கிழவர்.

நமது கதாநாயகருக்கு அவரைப் பார்ப்பதற்கே இப்போது வெட்கமாயிருந்தது. ''நான் வருகிறேன்'' என்றார்.

கிழவர் மருந்துப் பாட்டில்கள் இருந்த சாக்குப் பையை ஒரு கையில் பிடித்தபடியே 'கம் கம்' என்று இருமிக்கொண்டு சென்றார். அவர் தலை மறையும்வரை அங்கேயே நின்றுகொண்டிருந்த நமது கதாநாயகர், 'பண்பு!' என்று தமக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டார்! ..

# சின்ன விஷமம்தான்!

'லெமன்'

ரகுவின் வீடு. ஒரு விடுமுறை நாள். வெயில் சூடேறிப் பழுக்கும் நேரம். ரகு தன் அறையில் ஏதோ சுவாரசியமாகப் படித்துக்கொண்டிருக்கையில் தற்செயலாக அங்கே அவன் அப்பா (நரசு) நுழைவது தெரிந்து கையிலிருந்த புத்தகத்தை ஒளிக்கப் பார்த்தும் அகப்பட்டுக்கொண்ட சந்தர்ப்பம்.

நரசு: என்னடா அது ரகு, புஸ்தகம் கையிலே? இப்படிக் கொடு.

ரகு: (மென்று விழுங்கிக் கொண்ட) ஒன்றுமில்லேப்பா.. கோபுலு ஒரு புஸ்தகம் படிக்கத் தந்தான்..அதுதான்...

நரசு: அதுதான் இப்படிக் கொடு. பார்க்கிறேன், நானும்! (புத்தகத்தைப் கைப்பற்றித் திருப்பிப் பிடித்து) என்னது? 'துப்புத் துலக்குவது எப்படி?'.. ஹூம், நன்றாயிருக்கு, பாடப் புத்தகங்களைத் தூங்கப் பண்ணிவிட்டு உட்கார்ந்து விட்டான், துரை கணக்காக! 'துப்புத் துலக்குவது' எப்படி? தூங்கி விழுவது எப்படி? து..து..(சரியாக ஒன்றும் சொல்ல வராமல் தடுமாறி).. இதெல்லாம் என்னடா வெட்டிப் படிப்பு? ஹூம்?

ரகு: இல்லேப்பா. இந்த மாதிரிப் புத்தகங்கள் படிப்பது மூளைக்குச் சிறந்த பயிற்சி என்று எங்கள் சமூகப் பாட ஆசிரியர் அடிக்கடி சொல்வார். 'துப்புத் துலக்குவது எப்படி?' என்ற இந்தப் புத்தகம் எத்தனையாவதோ பதிப்பு-ரொம்ப நன்றாயிருக்கு! ஹி..ஹி..ஹி

நரசு: என்னடா ஹி ஹி? முதலில் உங்களுக்கெல்லாம் 'பல் துலக்குவது எப்படி!' என்ற புத்தகம் ஒன்று வாங்கித் தரணும்! பல்லைப் பார் பல்லை! மஞ்சளடித்துக் கிடக்கிறது!—

[''ரகு..டே, ரகு..'' உள்ளேயிருந்து கூப்பாடு கேட்கிறது ]

சரி சரி. அம்மா எதுக்கோ கூப்பிடுகிறாள். போய் என்னவென்று விசாரி.

[ரகு புத்தகங்களை அடுக்கித் தன் மேஜையை ஒழுங்கு செய்துவிட்டு, அப்பாவிடம் கைமாறிப் போன புத்தகத்துக்காகத் தயங்குகிறான்.]

நரசு: என்னடா நிற்கிறே? புத்தகமா? அது என்னிடம் பத்திரமாக இருக்கட்டும். நீ கவலைப் படாமல் போய்வா!

[ரகு வேண்டா வெறுப்பாக அறையை விட்டு வெளியேறுகிறான் ]

—ரகுவின் அண்ணா ராஜுவின் பிரவேசம்-

[அப்பாவின் கையில் ஏதோ புதுத் தமிழ்ப் புத்தகம்ஒன்று ஏறியிருப்பதைக் கண்டு ஆச்சரியப் பட்டு, அதை அப்போதே படிக்க ஆவலாய்த் தாவி வருகிறான் ]

ராஜு: அப்பா, அது என்ன புத்தகம்? அற்புதமாயிருக்கே, அட்டைப்படம்!

ஓகோ, 'துப்புத் துலக்குவது எப்படி'யா? கொஞ்சம் கொடு அப்பா; பார்த்துவிட்டுத் தந்து விடுகிறேன். ஒரே நிமிஷம்!

நரசு: பொறுடா ராஜு, குதிக்கிறாய கிடந்து! நான் புரட்டிக் கொண்டே வருகிறேன், அதற்குள்ளே என்ன அப்படியொரு அவசரம்?

ராஜு: அவசரந்தான், அப்பா! என் இங்கிலீஷ் புத்தகம் எங்கேயோ மாய்மாய் மறைந்துபோய் விட்டது. அது எங்கே, எப்படிப் போயிருக்கும் என்று அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறேன்.

அகப்படவே யில்லை; அடுத்த வாரம் ஒரு முக்கியமான டெஸ்டு!

ராஜு: ஆமாம். போன டெஸ்டி லேயே புத்தகத்தை வைத்துக் கொண்டு புரட்டிவிடலில்லையா? போய்ப் பாருடா. நன்றாய் எல்லா இடத்திலேயும் தேடிப் பாரு. அடுத்த வாரம் முக்கியமான டெஸ்டாம்! புத்தகத்தை ஒளித்து வைத்துவிட்டு வந்து பூனை வேஷம் போடுகிறான்!

—ராஜுவின் தங்கை ரஞ்சியின் பிரவேசம்-

ரஞ்சி: யாரப்பா பூனை வேஷம் போடுகிறார்கள்? எனக்கும் போட்டு விடச் சொல், அப்பா! எங்கள் பள்ளிக்கூடத்தில் வன மிருகங்கள் தினத்தைக் கொண்டாட ஒரு நாடகம் போடுகிறார்கள். அதிலே நான்தான் பூனை.

ராஜு: ஏய், நீயா பூனை? யானை கூட அரண்டுவிடுமே உன் குரலையும் உருவத்தையும் கண்டு! நல்ல ஆளைப் பொருக்கினார்கள் பூனை வேஷத்துக்கு!

ரஞ்சி: போதும், ராஜு அண்ணா! உன் ஆலோசனையையும் அபிப் ராயத்தையும் இங்கே யாரும் கேட்கவில்லை. முதலில் இதை மட்டும் சொல்லிவிடு. நான் புதிதாக எம்பிராய்டரி பண்ணி முடித்த டவலை மரியாதையாகத் திருப்பிக்கொடுக்கப் போகிறாயா, இல்லையா?

ராஜு: ஆமாம், பெரிய மரியா தையைக் கண்டுவிட்டாய்! என் ஷர்ட்டிங்கில் துண்டு விழுந்த லாங்கிளாத்து. நான் என் கைப் பணத்தைக் கொடுத்து வாங்கிய கலர் நூல். போடத்தொடங்கும் போது எனக்கே தருவதாகப் பேச்சு. இவ்வளவையும் உதறி விட்டுக் கடைசியில் ஏன் முரண்டு பிடித்தாய்?

ரஞ்சி: அதுக்காக அந்த அருமை யான டவலை எங்கேயாவது அழுக் குக் கூடைக்குள் ஒளித்து வைத்து விட்டு ஆட்டம் போடுகிறாயா?

ராஜு: அதிகம் பேசாதே, நிறுத்து! அப்படியும் அதை நான் எடுக்கவே இல்லை. எனக்குத் தெரியவே தெரியாது!

நரசு: (குறுக்கிட்டு) டேய் ராஜு, போங்கடா கூச்சல் போடாமெ! உங்கள் தகராறெல் லாம் ரூமுக்கு வெளியே போய்த் தீர்த்துக் கொள்ளுங்கள். என்னைச் சிறிது நேரம் நிம்மதியாக இருக்க விடாமல் என்ன தலை வேதனை இது?

ராஜு: (தாங்கலுடன்) என்ன அப்பா நீ, எப்பொழுதும் என்னையே அதட்டுகிறே? என் இங்கிலீஷ் புத் தகத்தை ரஞ்சிதான் எங்கேயோ ஒளித்திருக்கிறாள் என்று எனக்குச் சந்தேகம். இப்படியே அவள் சின்னச் சின்ன விஷமங்கள் நிறை யச் செய்கிறாள். அவள் டவலை நான் எடுத்துக் கொண்டதுக்குக் கூட அதுதான் காரணம்!

நரசு: இது என்னடா அண்டப் புளுகு? நம்பவே முடியலையே? அத்தனை அசடா அவள்? உனக்கு இங்கிலீஷ் மேலே இருக்கிற ஆசை யும் அக்கறையும் அவளுக்குத் தெரியாதா என்ன?

ரஞ்சி: இல்லை, அப்பா? நீ பழைய நாள் சங்கதியைச் சொல்கிறாய். இப்போதெல்லாம் காலம் மாறிப் போச்சு. அவன் இங்கிலீஷ் புத் தகத்திலே ஏதோ சின்ன டிராமா ஒன்று இருக்கு. அண்ணனும் தம்பியுமாக அதன் வசனத்தை யெல்லாம் ஏனோ மும்மரமாய் நெட்டுருப் பண்ணினார்கள், இரண்டு-மூன்று நாய்கள் சேர்ந்து உறுமி உறுமிக் குலைக்கிற மாதிரி. எனக்குப் படு தொந்தரவாக இருந் தது. அதுதான் முந்தாநாள் அதை எடுத்துக் கண் மறைவாய்க் கொண்டு போய் வைத்துவிட் டேன்.

—ரகுவின் பிரவேசம்—

ரகு: (வந்துகொண்டே) ஓகோ, உன் வேலைதானா அது? துப்புத் தானே துலங்குகிறது: குட்டுத் தானே வெளிப்படுகிறது! எல்லாம் இந்த ஐயா யோசனை! ராஜுவுடன் சேர்ந்து உன் புது டவலை ஒளித்து வைத்தால், தன்னைப் போலே விஷயம் வெளிவரும் என்று நான் தான் ஒரு சின்ன விஷமம்-இல்லை ஒரு நல்ல 'ட்ரிக்' செய்தேன்.

ரஞ்சி: உன் ட்ரிக்கோ, நீயோ! இரு, இரு. உன்னுடைய நரித்தனத்




துக்குச் சரியான வழி வைக்கிறேன்!

ரகு: அதுக்கு முன்னே உன் முதுகில் சரியாக வைத்துவிடுவேன். ஜாக்கிரதை!

ராஜு: டேய், அவளை ஏண்டா மிரட்டறே ரகு? பாவம், பரமசாது! பூனை வேஷம் போடுகிறுள் பள்ளிக் கூடத்திலே. (ரஞ்சியிடம்) மியாவ்! நீ போ, பூனையம்மா! ரகு உன்னை ஒன்றும் பண்ணிவிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்!

நரசு: (குறுக்கிட்டு) என்னடா, குழந்தையை யானை, பூனை என்றெல்லாம் கிண்டல் பண்ணுகிறீர்கள்?

ரகு, ராஜு: (இருவரும்) பின் என்ன அப்பா? அவள் மட்டும் எங்களை நாய், நரி என்று மறைமுகமாகத் திட்டவில்லையா? நீ எப்பொழுதும் அவள் பக்கந்தான்!

நரசு: இல்லேடா பசங்களா, நீங்கள் சொல்வது தப்பு, இப்பொழுது நான் யார் பக்கமும் இல்லை. எப்படி இருக்க முடியும்? ஒருத்தன் நாய், இன்னொருத்தன் நரி, மூன்றுமவள் பூனையோ, யானையோ! இன்னும் அது தீர்மானமாகவில்லை!

[உள்ளிருந்து அம்மாவின் குரல் கேட்கிறது:]

"உங்கள் விவாதம், தீர்மானமெல்லாம் சாப்பாட்டுக்குப் பிறகு வைத்துக்கொள்ளக் கூடாதா? நான் ஒருத்தி இங்கே கழுதையாய்க் கத்துகிறேன். எருமை மாட்டின் மேலே மழை பெய்த மாதிரி ஏனோ தானோவென்று இருக்கிறீர்களே! அரை மணி நேரம் ஆகிறது தட்டுப்போட்டு."

நரசு: சரி, சரி; கப்சிப்பென்று போவோம் வாங்கடா! 'அந்தக் குரங்குகளுக்குச் சரியாய் நீங்களும் குதிக்கிறீர்களே!' என்று அம்மா தொண்டையைக் கிழித்துக்கொள்வதற்குள் போய்ச் சாப்பிட உட்காருவோம்! (போகிறுர்கள்)

['துப்புத் துலக்குவது எப்படி?' என்ற அந்தப் புத்தகம் அத்தனை பேர் கைக்கும் தப்பி, அகன்ற மேசை மேல், ஆனந்த நித்திரையில் ஆழ்ந்துவிடுகிறது!]




## எங்கள் டிபன்!

'தமிழழகன்'

கடகடன்னு மாவை அம்மா
அரைச்சு வைச்சாளாம்!
கணகணன்னு கல்லை அக்கா
காய வைச்சாளாம்!

மடமடன்னு மாவை அண்ணி
கரைச்சு வைச்சாளாம்!
டிணடிணன்னு தோசை அத்தை
சுட்டு வைச்சாளாம்!

வேலைக்காரி சட்டினியை
அரைச்சு வைச்சாளாம்!
வெங்கம்மாவும் மிளகாய்ப் பொடி
இடிச்சு வைச்சாளாம்!

பாலுக்காரி தண்ணிப் பாலை
ஊத்தி வைச்சாளாம்!
பவுடர் பாலில் காபி, தோசை
தின்னு முடிச்சோமாம்!

# கறுப்புக் கண்ணாடி

**'பூரம்'**

## 18. கண்ணாடியின் மர்மம்

ஸம்பத்தும் ஸ்ரீதரனும் வெளியேறியதும்தான் எதிராஜும் துரையும் மாடியிலிருந்து இறங்கிவந்தார்கள். எதிராஜ் கண்களில் அப்பொழுது கண்ணாடி இல்லை! கீழே வந்ததும் அவன் திடுக்கிட்டுப் போனான். அங்கே வைத்திருந்த கறுப்புக்கண்ணாடி எங்கே?

''ஐயோ துரை! அந்தக் கறுப்புக் கண்ணாடி போய்விட்டது. என் கண்ணாடி போய்விட்டது!'' என்று அலறினான் அவன்.

''எங்கே? எங்கே? ..முதலில் இந்தக் கறுப்புக் கண்ணாடியைப் போட்டுக்கொள் முதலில்....'' என்று தன் கறுப்புக்கண்ணாடியைக் கழற்றிக் கொடுத்தான் அவன்.

அந்தக் கண்ணாடியை அணிந்து கொண்டே, ''விநாயகம்தான் எடுத்திருக்க வேண்டும். இப்பொழுதுதான் நான் வைத்தேன்'' என்றான் எதிராஜ்.

துரை விநாயகத்திடம் வந்து, ஓங்கி ஓர் அறை விட்டான்.

"எங்கேடா கண்ணாடி?..பல்லை உதிர்ப்பேன்..''

''ஐயோ! எனக்குத் தெரியவே தெரியாது!'' என்றான் அவன்.

''துரை! எல்லாம் போய்விட்டது. இனிமேல் ஆபத்துதான் வருகிறது. முதலில் இரும்புப் பெட்டி..இப்பொழுது இது..''- எதிராஜ் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

அதேசமயம் ஸம்பத்தும் ஸ்ரீதரனும், மோட்டார் சைக்கிளில் வேகமாக வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் மாலை 'ஹார்பரி'ல் சரக்குகளையெல்லாம் ஏற்றிவிட்டான் துரை. பரிசோதனைக்கெல்லாம் தப்பியாகிவிட்டது. கடைசியாக அந்தப் பெரிய பெட்டியையும் ஏற்றி உள்ளே அனுப்பிவிட்டான். இரவு கப்பல் கிளம்பப்போகிறது. சரியாக ஆறரை மணிக்கு ஒரு டாக்ஸியில் வந்து இறங்கினான் எதிராஜ் ஹார்பரில். பரிசோதனை அதிகாரியிடம் போனான் அவன். 'டாக்ஸி'யை உள்ளே கொண்டு போக அநுமதி கேட்டான். பரிசோதனை செய்துவிட்டு அவரும் அநுமதி தந்து விட்டார். எதிராஜ் காரை எடுக்கக் கிளம்பிவிட்டான்.

அதேசமயம்—

'போன்' அலறியது. அந்த அதிகாரி போனை எடுத்தார். அவர் யாருடனோ அவசரமாகப் பேசினார். பிறகு ரொம்பவும் சாவதானமாக எதிராஜிடம், ''கொஞ்சம் இருங்கள், மிஸ்டர்! கால் மணி இருங்கள்!'' என்றார்.

கால்மணிக்குப் பிறகு அங்கே ஒரு போலீஸ் லாரி வந்து நின்றது. பட்டாபி, ஹெட்கான்ஸ்டபிள் இருவரும், இருபது கான்ஸ்டபிள்களுடன் இறங்கினார்கள். அந்த அதிகாரி மரியாதையாக எழுந்து நின்றார்.

பட்டாபி நேராக வந்து, ''ஹெட்கான்ஸ்டபிள், அந்த ஆளை 'அரெஸ்ட்' செய்!'' என்றார். எதிராஜ் திடுக்கிட்டு விழித்தான்.

''ஏன் ஸார்? என்ன காரணம்?'' என்றான் எதிராஜ்.

''காரணம் பின்னால் தெரியும், மிஸ்டர்! சரக்குகளெல்லாம் மலாயா போகிறதுதானே?'' என்றார் பட்டாபி கேலியாக.

பிறகு, அங்கிருந்த டாக்ஸியைச் சோதனை போடச் செய்தார். காரில் வெளிப்படையாக ஒன்றும் தெரியாத போதிலும், அதில் ஒரு

ரகசிய அறை இருந்தது. அதிலிருந்து கரன்ஸி நோட்டுக்கள் சிதறி விழுந்தன.

''ஏய்! 704! பத்துக் கான்ஸ்டபிள்களுடன் நான் சொன்ன அந்த 'கோடவுனு'க்குப் போங்கள். நான் இதோ வருகிறேன் அங்கே'' என்றார் பட்டாபி.

அப்பொழுதுதான் ஸம்பத்தும், ஸ்ரீதரனும் அங்கே வந்து சேர்ந்தார்கள். இருவரும் கப்பலைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள். ஸம்பத்திற்கு அந்தப் பைத்தியக்காரப் பெண்ணைப்பற்றியே கவலையாக இருந்தது. கப்பலை ஒவ்வோர் இடமாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தார்கள். வெகு தூரத்தில் கப்பலின் மேல்தளத்திலிருந்து 'பைனகுலரி'ல் ஓர் ஆள் எதையோ கவனித்துக் கொண்டிருந்தான். ஸம்பத் அவனைப் பார்த்தான். அந்த ஆள் நடை, உருவம், எல்லாவற்றிலும் எதிராஜை ஒத்திருந்தான். ஆனால் அவன் கண்ணில் கறுப்புக்கண்ணாடி இல்லை. ஸம்பத் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, வெகு தூரத்திலிருந்த அவன், எதையோ பார்த்துவிட்டு வேகமாக நடந்தான். சாமான் அறைக்குள்ளிருந்து ஒரு பெரிய பெட்டியைப் புரட்டிக் கொண்டு வந்தான். சிரமப்பட்டு அதைத் தூக்கிக் கடலில் தள்ளினான். ஸம்பத் 'ஹா!' வென்று அலறினான். ஆழ் கடலின் பேரிரைச்சலில் அந்தப் பெட்டி 'தடா'லென்று விழுந்து மூழ்கியது. 'கல்கத்தா' கடலில் மூழ்கிவிட்டாள்! இவ்வளவு நாட்களாக ஸம்பத் எடுத்துக்கொண்ட முயற்சியெல்லாம் வீணாகிவிட்டது. கடைசியாக அந்த அப்பாவிப் பெண்ணைக் கடல் விழுங்கிவிட்டது. ஸம்பத்தின் கண்களில் கண்ணீர் நிரம்பியது. ''ஐயோ! பைத்தியமாகவே வாழ்ந்து உயிரை விட்டு விட்டாயா?'' என்று அவன் மனம் எண்ணி எண்ணி ஏங்கியது.

''ஸ்ரீதரா! வா! போகலாம்! 'கல்கத்தா' கடலில் போய்விட்டாள். அப்பாவிடம் சொல்ல வேண்டும்.''

ஸ்ரீதரன் ஒன்றும் தோன்றாமல் நின்றான்.

பட்டாபி 'கோடவுனு'க்குப் போனதும், ஹெட்கான்ஸ்டபிள் சாமிக்கண்ணு எதிராஜை விசாரிக்க ஆரம்பித்தார். அவன் விலங்கிடப்பட்டு அங்கே நிறுத்தப்பட்டிருந்தான். அதேசமயம் துரை அங்கே வேகமாக வந்தான். துரையைப் பார்த்து அசந்துவிட்டார் சாமிக்கண்ணு! எதிராஜுக்கும் துரைக்கும், நடை, உடை, நிறம், ஒன்றிலும் ஓர் இம்மிகூட வித்தியாசம் இல்லை. அவன் கண்ணில் கறுப்புக்கண்ணாடி இல்லை. அவ்வளவுதான் வித்தியாசம்! துரையும் 'அரெஸ்ட்' செய்யப்பட்டான். அந்த டாக்ஸியிலிருந்து சுமார் இருபத்தைந்து, லட்சத்திற்குக் கரன்ஸி நோட்டுகள் கைப்பற்றப் பட்டன. கப்பலில் ஏற்றப்பட்ட அவர்களுடைய சாமான்கள் எல்லாவற்றையும் போலீஸார் கைப்பற்றினார்கள். அதேசமயம் ஸம்பத்தும் ஸ்ரீதரனும் அங்கே வந்தார்கள்.

''ஸார்! அந்தப் பைத்தியக்காரப் பெண்ணைக் கடலில் தள்ளி விட்டான் இவன்!''

''கடலிலா! எப்படி!'' என்றார் சாமிக்கண்ணு.

''பெட்டியோடு கடலில் தள்ளி விட்டான்!''

துரை, ''கிடையவே கிடையாது!'' என்று சாதித்தான்.

ஆனால் ஸம்பத் சொல்வது உண்மை என்று தெரிந்து கொண்டார் ஹெட்கான்ஸ்டபிள். அதே சமயம் பட்டாபி 'கோடவுனு'க்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். அதோ! அவருடன் கூட வருவது யார்? யாரோ ஒரு பெண்ணல்லவா? ஆகா! அது அந்தப் பெண் 'கல்கத்தா'தான்! ஹெட்கான்ஸ்டபிள், ஸம்பத், ஸ்ரீதரன்,—ஏன் துரை, எதிராஜ் எல்லோருமே அதிர்ச்சி அடைந்து விட்டார்கள்.

பட்டாபி, ''ஏன், ஆச்சரியப்படுகிறீர்கள்? 'கோடவு'னில் இவளை



வைத்துப் பூட்டிவிட்டுக் கம்பி நீட்டியிருக்கிருர்கள் இவர்கள்! நல்ல வேலே!'' என்ருர்.

பிறகு எதிராஜ், துரை இருவரையும் லாரியில் ஏற்றிஞர்கள். பிறகு லாரி ஸ்டேஷனுக்குப் பறந்தது. அன்று ஊர் முழுவதும் ஒரே அமர்க்களமாகி விட்டது.

அன்று இரவு, அந்தப் பெண் 'கல்கத்தா'வைப் பட்டாபி தன் வீட்டுக்கே அழைத்து வந்தார். ஸம்பத், ''அப்பா! எனக்கு ஒன்றுமே புரியவில்லே. அந்தப் பெட்டியை அவன் சிரமப்பட்டுத் தூக்கிக் கடலில் எறிவதை நான் கண்ணுல் பார்த்தேன்!'' என்ருன் பட்டாபியிடம்.

''எந்தப் பெட்டியை?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அந்தப் பெண்.

''ஒரு பெரிய பெட்டியை..'' என்ருன் ஸம்பத்.

''ஐயையோ!..''

''என்ன? என்ன?'' என்று ஏக காலத்தில் எல்லோரும் கேட்டார்கள்.

''அதில்தான் அந்தப் பையன் இருந்தான்!''

''ஐயோ! எந்தப் பையன்?..''

''ஒரு பையன்..'வேர்க்கடலே' விற்கும் பையன்..அவன் ரொம்ப நல்லவன். அவர்கள் என்னேப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிய

போது அவன்தான் தானே அதில் உட்கார்ந்து கொண்டு என்னை வெளியே அனுப்பினுன்!'' என்ருள் அவள்.

பட்டாபியும், ஸ்ரீதரனும் ''ஹா..!'' வென்று வாயைப் பிளந்தார்கள்.

''ஐயோ! பாவம்! 'வேர்க் கடலை' போய்விட்டானு?'' என்ருன் ஸ்ரீதரன்.

''கல்கத்தா! அதை அப்பொழுதே சொல்லக்கூடாதா?'' என்ருன் ஸம்பத்.

''அப்பா! அந்த விநாயகம் குற்றவாளி இல்லை. ஏதோ அசட்டுத் தனத்தில் செய்து விட்டான். ரொம்பக் கண்டித்து விடாதீர்கள்'' என்ருன் ஸம்பத்.

''இருந்தாலும், அவனுக்கு நல்ல எண்ணம் இல்லையே!''

''அப்பா! நாளைக்கு விசாரணைக்கு நாங்களெல்லாம் வருவோம். தெரிந்ததா? எவ்வளவோ விஷயங்கள் மர்மமாகவே இருக்கின்றன!'' என்ருன் ஸம்பத்.

பட்டாபி, ''பாவம்! அந்த அசட்டு சுப்புவுக்குப் படு காயம்! ஆஸ்பத்திரியில் கிடக்கிருன், டாக்டர்கள் கவனிக்கிருர்கள். இன்று மாலையில் பார்த்தேன்!'' என்ருர்.

''பாவம்! அப்பா அவன்! அவனுேடு பழகுவதே ரொம்பத் தமாஷாக இருந்தது. அப்புறம் பஞ்சுஸாருக்கு ஒரு 'மெடல்' கொடுக்கலாம். அந்த இரும்புப் பெட்டி அவரால்தானே கிடைத்தது!''

''அந்த இரும்புப் பெட்டியில் இருந்தது ஒரு முக்கியமான பொருள். போன வருஷம் பார்த்தசாரதி கோவிலில் ஸ்தூபி காணுமல் போகவில்லை? அதுதான் அதற்குள் இருந்தது. அது மட்டுமில்லை! சில முக்கியமான கடிதங்கள் அதில் இருந்தன. அவனுக்கு மலேயாவிலிருந்து ஷண்முகம் என்ற ஓர் ஆள் எழுதிய கடிதம் அது. அந்தப் பெட்டியில் இருந்தது இருபத்தையாயிரம் பெறுமானமுள்ள ஒரு பொருள்!'' என்ருர் பட்டாபி.

''அது சரி! நீங்கள் அன்று மயக்கமாக விழுந்தீர்களே! அது என்ன விஷயம்?'' சரியான சமயத்தில் ஞாபகப்படுத்தினுன் ஸ்ரீதரன்.

''அதுவா! நானே சொல்லவேண்டுமென்றிருந்தேன். ஸம்பத்! அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது உனக்குத் தெரியுமல்லவா?''

''தெரியும் அப்பா? ஆனுல் புரியவில்லையே!''

''ஒரு பெரிய விஷயம் சொல்லப் போகிறேன். இனிமேல் அதைச் சொல்வதில் கஷ்டம் இல்லை'' என்று கூறிவிட்டு பட்டாபி தம் மனைவி செல்லத்தைக் கூப்பிட்டார். ஸம்பத்தின் அம்மா செல்லம் வந்தாள்.

''செல்லம்! உனக்கு ஞாபகமிருக்கிறதா? முன்பு ஒரு தடவை கல்கத்தா போனேுமே!'' என்று கேட்டார் அவர்.

அதை எப்படி மறக்க முடியும்? அங்கேதானே நம் விஜயா திருவிழாக் கூட்டத்தில் காணுமல் போய்விட்டாள்!'' என்ருள் ஸம்பத்தின் அம்மா. அதை நினைக்கும் அந்த அம்மாளின் மனம் துக்கத்தால் விம்மியது.

''அந்த விஜயாதான் இதோ இந்தப் பெண்!'' பட்டாபியின் அந்த வார்த்தைகள் எல்லோரையும் ஒரு கணம் தூக்கி வாரிப் போட்டது.

ஸம்பத்தும் ஸ்ரீதரனும், ''நிஜமாகவா?'' என்று ஆச்சரியமும் ஆனந்தமும் தொனிக்கக் கேட்டனர். அந்த ஆனந்தத்தில் ஸம்பத்தின் அம்மாவிற்குப் பேசவே தோன்றவில்லை.

''ஸம்பத்! இந்த விஷயத்தை அப்பொழுதே சொல்லியிருந்தால், உடனே இவளைக் கூட்டிக் கொண்டுவர முயற்சி செய்து அவர்களுடைய கையில் நீயும் சிக்கியிருப்பாய், அதனுல்தான் சொல்லவில்லை. அந்தக் கடிதம் மலாயாவிலிருந்துதான் எழுதப் பட்டிருந்தது. நீ கவனிக்கவில்லை. 'எட்டு வருஷங்களுக்கு முன் கல்கத்தாவில் திருவிழாக் கூட்டத்தில் நகைக்கு ஆசைப்பட்டு அந்தக் குழந்தையைத் திருடினுயே! அது

இப்பொழுது பாரமாக இருக்கிறதே, அவசியமானால் கொன்று விடு. ஏன் அவளைப் பைத்தியமாக்கி யிருக்கிறாய்?' என்று எழுதியிருக்கவில்லையா, ஸம்பத்?''

''அப்பா! நல்லவேளை விஜயா மறுபடியும் கிடைத்தாளே?''

விஜயா அப்பொழுது அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

''விஜயாவைக் கட்டிக்கொண்டு அம்மா கண்ணீர் சொரிந்தாள்;

''அப்பா! அந்த 'வேர்க்கடலை' இல்லாதபோனால் 'கல்கத்தா' கடலில் மூழ்கியிருப்பாள்'' என்றான் ஸம்பத்.

''நல்ல பெயர் வைத்தார்கள் 'கல்கத்தா' என்று. இனிமேல் அவள் விஜயராணி. நாளைக்கு டாக்டரைக் கூட்டிக்கொண்டு வந்து அவள் உடம்பைக் கவனிக்க வேண்டும்'' என்றார் பட்டாபி.

* * *

மறுநாள் விசாரணை; அன்று காலையில் விஷயங்கள் எல்லாம் வெளிப்பட்டன. 'நவீன முறையில் கொள்ளையடித்த இரு சகோதரர்கள் கைது!' என்று தினசரிகளில் வெளிவந்திருந்தது.

விசாரணையின் போது தெரிந்து கொண்ட விஷயங்கள் மேன்மேலும் ஆச்சரியத்தைக் கொடுத்தன. ஆரம்பத்தில் 'கறுப்புக் கண்ணாடி'யை எதிராஜிடமிருந்து பிடுங்கியதும் ஒரே ஆச்சரியமாகி விட்டது. ''ஆமாம்! எதிராஜுக்கு ஒரு கண் இருக்கவேண்டிய இடத்தில் வெறும் குழியாக இருந்தது; ஒரு கண்தான் அவனுக்கு. மற்றப்படி துரைக்கும் எதிராஜுக்கும் வித்தியாசமே இல்லை!

துரையும் எத்திராஜும் இரட்டையாகப் பிறந்த சகோதரர்கள். அதனால் உருவத்தில் ஒரே மாதிரியாக இருந்தார்கள். இந்த உருவ ஒற்றுமையைப் பயன்படுத்திக்கொண்டு, சில காலம் ஊரில் கொள்ளையடித்து வந்தனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, எதிராஜுக்கு ஒரு சமயம் ஒரு கண்ணில் ஒரு குண்டு தாக்கி, கண் போய் விட்டது. அது இருவருக்கும் வித்தியாசத்தைக் காட்டியது.



நட்டுவனார்: சே! சே! என்ன, வெயில்....என்னையே நடனம் ஆடவெச்சுடறதே!

---

அதை மறைக்க அவன் கறுப்புக் கண்ணாடி அணிந்தான். அவர்களிடையே இருந்த உருவ ஒற்றுமை அவர்கள் போலீசுக்குப் பாய்ச்சுக் காட்ட உதவியது. அவர்களிருவரும் பிறந்தது மலேயாவில்தான். இருவரும் ஒரே சர்க்கஸ் கம்பெனியில் வேலை பார்த்தவர்கள். கேவல்ராம் சர்க்கஸ் கம்பெனியில் அவர்கள் 'பார்' ஆட்டக்காரர்கள். அந்த தேகாப்பியாசம் அவர்கள் தொழிலுக்குச் சாதகமாக அமைந்தது. யாரும் எளிதில் போகமுடியாத உயரத்திற்கு அவர்கள் தாவி ஏற முடியும். தண்ணீர்க் குழாயின் மூலமும், கொடிக்கம்பியின் மூலமும் நடந்து செல்வது அவர்களுக்கு எளிதாக இருந்தன. எவ்வளவு பெரிய கோபுரமானாலும் ஒரு நீண்ட கயிற்றின் மூலம் அவர்களால் தாவி ஏறமுடியும். அவனுக்குப் பூட்டை உடைக்க வேண்டிய அவசியம் இல்லை. அவன் ஓட்டின் கூரை மேலும், சரிவிலும் ஓட முடியும். ஓடுகளை ஓசைப்படாமல் பெயர்க்க முடியும். அவனுடைய ஆயுதம் கயிறு ஒன்றுதான்.

துரை சிறிது நாட்கள் கூர்க்கா வேஷம் போட்டான். அதன் மூலம் தங்கள் வேலையைச் செய்தார்கள். அதைத் தவிர புதிதாக வீடு கட்டும் கண்டிராக்டர்களில்

சிலர் அவர்கள் கையில் இருந்தார்கள். புது வீடுகளில் முக்கியமான அறையின் ஜன்னல்கள் 'மாய ஜன்ன'லாக இருக்கும், திருடன் வந்த சுவடும், போன சுவடும் தெரியவே தெரியாது.

இந்தத் தகவல்களையெல்லாம் பட்டாபி தெரிந்து கொண்டார். ஸம்பத் அன்று கொண்டுவந்து கொடுத்த 'கறுப்புக் கண்ணுடி'யைக் காட்டி, ''இது உன்னுடையதுதானு?'' என்று கேட்டார். அதை ஆமோதித்தான் எதிராஜ். அந்தக் 'கறுப்புக் கண்ணுடியிலும் மர்மம் அடங்கியிருந்தது. துரை கடைசியாக அதையும் சொல்லிவிட்டான்.

அந்தக் கறுப்புக் கண்ணுடியின் தடித்த பிரேமினுள் நான்கு, ஐந்து விலையுயர்ந்த வைரங்கள் புதைக்கப்பட் டிருந்தன. அதனுல்தான் அதை எப்பொழுதும் தன் கண்ணிலேயே போட்டுக்கொண் டிருந்தான் எதிராஜ்.

கடைசியாக எதிராஜ், துரை, இருவர் பேரிலும் குற்றச்சாட்டுகள் எழுதப்பட்டன. பாரத நாட்டிலிருந்து மலாயாவுக்குச் சுமார் 25 லக்ஷ ரூபாய் கரன்ஸியைக் கடத்திச் செல்ல முயன்றது முதல் குற்றம். நகரில் கொள்ளையடித்தது இரண்டாவது குற்றம். பல விலையுயர்ந்த நகைகள், பாத்திரங்கள், மூன்று கோடி பெறுமானமுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் தங்க ஸ்தூபிகள், உயர்ந்த ரக வைரங்கள், ஆபரணங்கள், எல்லாவற்றையும் போலீஸார் கைப்பற்றினர்.

கொள்ளையடித்த நகைகளையெல்லாம் மலேயாவுக்கு அனுப்புவதுதான் அவர்கள் வேலை. அங்கே ஷண்முகம் என்கிறவர் சொந்தமாக ஒரு தட்டான் பட்டறை வைத்திருந்தார். நகைகளையெல்லாம் அவர் உருமாற்றி அங்கேயே விற்றுக் காசாக்கினுர். இப்படித்தான் அவர்கள் தொழில் நடந்தது.

விசாரணையின் போது, ஸம்பத் ஸ்ரீதரன் இருவரும் இந்த விஷயங்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்களிருவருக்கும் ஆனந்தம் கரை காணவில்லை. அன்று பட்டாபியின் வீட்டில் பெரிய விருந்து நடந்தது. ஸ்ரீதரன் விடுமுறை முடிந்து விட்டதால் மறுநாளே ஊருக்குக் கிளம்பிவிட்டான்.

ஒரு வாரத்திற்குப் பின் ஸம்பத், முதலில் பேனு நண்பனுகத் தொடங்கிப் பின்னர் உயிர் நண்பனுகிவிட்ட ஸ்ரீதரனுக்குக் கடிதம் எழுதினுன். அந்தக் கடிதம் இது:

''அன்புள்ள நண்பன் ஸ்ரீதரனுக்கு,

உன்னை எவ்வளவோ தடுத்தும் நீ ஊருக்குக் கிளம்பிவிட்டாய். அந்தக் 'கேஸி'ல் உதவி செய்ததற்காக உனக்கு ஒரு 'மெடல்' கொடுத்திருக்கிறுர்கள். அதை நீ நேரில் வந்தால்தான் கொடுப்பேன். அந்தக் 'கறுப்புக் கண்ணுடி'க்குக் கோர்ட்டில் ஆயுள் தண்டனை விதித்து விட்டார்கள். இப்பொழுது அவர்கள் செக்கு இழுக்கிறுர்கள் ஜெயிலில். விநாயகத்திற்கு ஆறுமாத தண்டனை, அப்புறம் விடுதலை! பாவம்! சுப்புவுக்குக் காயம் ஆறிவருகிறது! இன்னும் உளறிக்கொண்டுதான் இருக்கிறுன். ரொம்பப் பரிதாபம்!

இப்பொழுது விஜயராணியை டாக்டர் கவனித்து வருகிறுர். மூளை வளர்ச்சி அடையவில்லையாம். மெதுவாகத்தான் ஆகுமாம். எப்படியும் அவள் கிடைத்தாளே என்று இருக்கிறது எனக்கு.

நன்ருகப் படித்து வருவாய் என்று நம்புகிறேன். அரைப் பரீக்ஷை லீவுக்கும் நீ அவசியம் வர வேண்டும். சென்னையைச் சுற்றிச் சுற்றிக் காண்பிக்கிறேன். இந்தத் தடவை முடியவில்லை. ஒரு விஷயம் எங்கப்பாவுக்கு 'ஸூப்ரெண்டண்ட்' பதவிக்குப் பிரமோஷன் ஆகிவிட்டது. நீ எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறுய். எப்படி நன்றி தெரிவிப்பது என்று தெரியவில்லை. உடனே பதில்.

உனதன்புள்ள
ஸம்பத்.''

முற்றும்

★




# அண்ணன் கடிதங்கள்

சம்பந்தம்

அன்புள்ள தம்பிக்கு

அநேக நலம் பெருகுக:

உன் கடிதத்தின் தலைப்பிலே போட்டிருக்கும் தேதிக்கும் அது என் கைக்குக் கிடைத்திருக்கும் நாளுக்கும் கணக்கிட்டுப் பார்த்தேன். இடையில் ஒரு நாள் தவக்கப்பட்டுள்ளதே; ஏன்? ஒரு வேளை நீதான் தேதியைத் தப்பிதமாய்ப் போட்டுவிட்டாயா அல்லது எழுதிய மறுநாள் தபாலில் சேர்த்தாயா? எப்படியும் இரண்டில் ஒன்று நடந்துதான் இருக்க வேண்டும். அது குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். கடிதம் எழுதும் பொழுது கவனமாய்ச் சரியான தேதியைப் போடுவதே ஒழுங்கு. அதுபோல், தபால் கட்டு எடுப்பதற்கு முன்பாகவே எழுதி அன்றைத் தபாலில் சேர்ப்பதுதான் சரி. ஒன்றே செய்; நன்றாய்ச் செய்; அன்றே செய் என்று நான் முதலிலேயே சொல்லியுள்ளேனே! அதை அடியோடு மறந்து விட்டாயா? தவறாது அதை எப்பொழுதுமே கடைப்பிடித்து வா, தம்பி!

நிற்க, இந்தத் தடவை நீ கடிதத்தைச் சற்று ஒழுங்காக முறைப்படி எழுதியுள்ளதைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமுறுகிறேன். தொடர்ந்து இப்படியே எழுதி வா. ஆனால் உன் கையெழுத்து ஏன் இவ்வளவு மோசமாக அமைந்து விட்டது இந்தக் கடிதத்தில்? ரொம்பவும் கிறுக்கல். ஒரு வேளை கவிழ்ந்து கொண்டும், தவழ்ந்து கொண்டும் எழுதியிருப்பாயோ, என்னவோ!

எப்பொழுதும் எழுதுகோலைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு நேராக அமர்ந்து எழுதவே பழகு. அப்பொழுதுதான் எழுத்துக்கள் பிறருக்குப் புரியும்படி தெளிவாகவும், முத்து முத்தாக அழகாகவும் அமையும். அதற்காக நிறுத்தி எழுதுகிறேன் என்று நேரத்தை வீணாக்காதே. எழுத்துக்களின் வடிவங்களைச் சிதைக்காமல் விரைவாக எழுதவும் நீ பழகிக்கொள்ள வேண்டும். சொற்களுக்கு இடையிலும், வாக்கியங்களுக்கிடையிலும் அவசியம் இடம்விட்டே எழுது. வரிகளும் நேர்நேராக அமைந்தால் தான் அழகாயிருக்கும். ஒரு வரி கோணலாகவும், மற்றொரு வரி நேராகவும் அமைந்தால் பார்ப்பதற்குச் சிரிக்கத்தான் தோன்றும்.

கிருஷ்ணராஜு என்றொரு நண்பன் உண்டு எனக்கு. அவன் எழுதுவதை அவனாலேயே படிக்க முடிவதில்லை என்றால் உனக்கு ஆச்சரியமாயில்லை? ஆனால் அது உண்மை. அவன் எழுதும் இலக்கங்கள் கூட ஒரே கிறுக்கலாகத் தானிருக்கும். உன்னையொத்த சிறு வயதில் அவனை யாரும் ஒழுங்குபடுத்த வில்லைபோலும். அதனால் இப்பொழுது ரொம்பவும் சிரமப்படுகிறான். அந்தத் தொந்தரவு உனக்கு வேண்டாம். தினம் ஒரு பக்கம் நீ தவறாமல் பார்த்து எழுது; நாளடைவில் சரியாகிவிடும்.

...நூலகம்
21816
சென்னை-600...



''ஐயா, இந்த ஜாங்கிரி எந்த ஊர் ஜாங்கிரி?''

''ஏன், இந்த ஊர் ஜாங்கிரி தான்!''

''விலே?''

''மூன்றணு தம்பி!''

''என்ன ஐயா! மைசூர்ப் பாகும் மூன்றணு, இந்த ஊர் ஜாங்கிரியும் மூன்றணுவா? சின்ன பையன்னு ஏமாத்தப் பாக்கிறீங்களோ?

—''விண்மணி''

---

படிக்கும் பொழுதும் நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டே படி. உடம்பை வளேத்துக் கொண்டோ, அல்லது தலேயைச் சாய்த்துக் கொண்டோ படிப்பது கூடவே கூடாது. புத்தகத்தைக் கண்ணுக்கு ஒரடி தூரத்தில் பிடித்துக்கொண்டு படிக்கவேண்டும். படிக்கும் பொழுது புத்தகத்தினுல் முகத்தை மூடிக்கொள்ளாதே! சற்றுத் தாழ்வாக-முகம் தெரியும் படி-புத்தகத்தைப் பிடித்துக் கொள்வதே முறை.

வாய்விட்டு வாசிக்கும் பொழுது எழுத்து எழுத்தாகச் சேர்த்து மெதுவாகப் படிக்காதே! அதற்காக ஒரே வேகமாக வாசிப்பதும் கூடாது. பொருள் விளங்கும்படி நிதானமாகப் படிக்கவேண்டும். அதோடு விஷயத்திற்கு ஏற்றவாறு குரலே உயர்த்தியும் தாழ்த்தியும் படிப்பதே சிறந்தது. மௌனமாகப் படிப்பதை அதிகமாகப் பழகிக்கொள். மனம் படிப்பில் ஊன்றி விஷயங்களேச் சீக்கிரத்தில் அறிய இந்தப் பழக்கம் மிகவும் நல்லது. இவ்விதம் நீ பழகிக்கொண்டால், பிறகு பத்திரிகைகளேயும் மற்ற நூல்களேயும் தாளுகவே நீ படித்து அறியலாமல்லவா?

பேசும்பொழுதும் நேராக நிமிர்ந்து நின்று பேசவேண்டும். எதிரிலிருப்போரின் முகத்தைப் பார்த்து—ஏன்! அவர்களின் மூக்கு நுனியைப் பார்த்து—பேசுவதே முறை. சொல்லும் செய்தியைக் கோர்வையாக ஒழுங்குபடுத்திச் சொல். மிகவும் தாழ்ந்த குரலில் பேசக்கூடாது. அதற்காக ஒரேயடியாய்க் கத்திப் பேசுவதும் கூடாது. எதிரிலுள்ளோரின் காதில் விழும்படி பேசுவதே சிறந்தது. பேசும் சொற்களே சரியாக உச்சரி. கூடுமானவரை மிகவும் கொச்சையான சொற்களே உபயோகிக்காதே!

நம் தமிழ் மொழியில் 'ழ'கரம் ஒரு சிறந்த எழுத்து. மற்ற மொழிகளில் இல்லாத தனிச் சிறப்பு உண்டு 'ழ' கரத்திற்கு. ஆனல் அநேகம் பேர்கள் அதைச் சரியாகவே உச்சரிப்பதில்லேயே! 'வாளேப் பளம்' என்றும் 'தமிள் வாள்க' என்றும் பிறர் சொல்வதைக் கேட்கும்போது எனக்கு எவ்வளவு வருத்தமாயுள்ளது தெரியுமா! அவ்வண்ணம் இல்லாமல் நீ சரியாக உச்சரிப்பாய் என்றே எண்ணுகிறேன்.

இவ்வண்ணம் நீ எழுதுவதிலும், படிப்பதிலும், பேசுவதிலும் மிகவும் சிறந்து விளங்கவேண்டும் என்பதே என் அவா. பிற பின் -

உனதன்புள்ள அண்ணன்.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

நாகர்கோயில் { உபதலைவர்: ஆர். சந்திரமோகன்
செயலாளர்கள்: ஆர். மோகன்; ஈ. கோம்பை
பொருளாளர்: ஜி. ராமையா }

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'சுபாஷ்' என்ற மாதந்தரக் கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. கதை, கவிதைகள் அனுப்பும் விலாசம்: ஈ. கோம்பை, எண்ணெய்க்கடை, மேலத்தெரு கோட்டாறு.

திருவல்லிக்கேணி-சென்னை { உபதலைவர்: டி. பரந்தாமன்
செயலாளர்: ஆர். மோகன்குமார்
பொருளாளர்: ஏ. வி. சீனிவாசன் }

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'கலைக்கூடம்' என்ற மாதாந்தரக் கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கதைகள் அனுப்பும் விலாசம்: D. பரந்தாமன், 33-B இருசப்பகிராமணித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

## பேனா நண்பர்கள்

1. க. அ. ஸ்ரீநிவாஸன், 158, 6-ஆவது குறுக்குத் தெரு, டிரஸ்டுபுரம், கோடம்பாக்கம், சென்னை-24
2. தொழிற்பித்தன், 43. மெயின்ரோடு, புதுப்பாளையம், கடலூர்-என். டி.
3. ஆர். லட்சுமணன், S/o எஸ். ராமையா கண்டியர், கண்டியர் தெரு, பட்டுக்கோட்டை.
4. ஏ. அப்துல் ரஹீம்கான், 44. அஜீஸ் மான்சில், கே. ஸி. கார்டன் தெரு, ஈரோடு.
5. எஸ். எஸ். ஹமீது, 17. செல்வ பாச்சா வீதி, ஈரோடு.
6. ஏ. ஆர். வேங்கடதேசிகன், 24/149, சலிவன் வீதி, கோயம்புத்தூர்.
7. இரா. பூபாலன், 3055. டபீர்குளம் ரோடு, கீழவாசல், தஞ்சை.
8. ரா. கிருஷ்ணமூர்த்தி, 15. பாணுதுரை தெற்கு வீதி, கும்பகோணம்.
9. நா. ஆனந்தகிருஷ்ணன், 75. மு. பி. கோயில் தெரு, புவனகிரி. (தெ. ஆ).
10. எஸ். கிருஷ்ணமூர்த்தி, 24, சந்தான கோபாலபுரம், மெயின் தெரு, விழுப்புரம்.
11. ஏ. ராஜமாணிக்கம், S/o கே. அர்த்தநாரி செட்டியார், தேங்காய் வியாபாரம், மார்க்கெட், ஈரோடு.
12. ஸ்ரீ கிருஷ்ணு லைப்ரரி, 4/96, கீழப் புதுத்தெரு, சென்னிமலை போஸ்டு, கோயம்புத்தூர் ஜில்லா.
13. எஸ். ராமசாமி, 44/52, சென் அந்தோனி மாவத்தை, கொழும்பு-13.
14. கு. சிவகுருநாதன், C/o கதீட்ரல் கல்லூரி, எஸ். எஸ். ஸி. (பி) தமிழ், கொழும்பு-13.
15. செ. கந்தசாமி, 'பாரதி அகம்', கரணவாய் தெற்கு, கரவெட்டி, (இலங்கை).
16. அ. செபஸ்தியாம்பிள்ளை, பேராதெனியா மருந்துசாலை, கண்டி ரோடு, பேராதெனியா, இலங்கை.

(Regd. as a Newspaper in Ceylon.) Regd. No. M. 554



தயாராகிறது!

# கண்ணன்
# தீபாவளி மலர்
# 1958

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தான

## கண்ணன் மலர்

வாணங்களைவிட வண்ண ஜாலம் மிகுந்தது!
வெடிகளைவிட வேடிக்கைகள் நிறைந்தது!
புத்தாடைகளைவிடப் புதுமைகள் கொண்டது!

அறிஞர்களுடைய கதைகள், தலைசிறந்த எழுத்தாளர்களுடைய எழுத்தோவியங்கள், பரிசு பெற்றவர்களின் சித்திரங்கள், கதைகள், கவிதைகள், கட்டுரைகள் முதலியவற்றோடு பொழுதுபோக்குக்குரிய பல அம்சங்களும் அறிவு வளர்ச்சிக்கான பல பகுதிகளும்கொண்டு உருவாகிவருகிறது

உங்கள் பிரதிக்கு இப்போதே முந்திக்கொள்ளுங்கள்

கண்ணன் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை-4



விலை
1 ரூபாய்

தபாற்பெட்டி நெ. 804, மயிலாப்பூர், சென்னை 4.